Registered as a News Paper in Sri Lanka    பக்கங்கள்: 06    விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY • மக்கள் தினசரி •

நாதம் 01    பிரமோதூத ஹூ வைகாசி மீ 20 ஆம் உ    ஞாயிற்றுக்கிழமை    (03 - 06 - 1990)    ஹிஜ்ரி 1410    ஜுல்ஹஃ 09    ஓசை 105

## யானை தாக்கி ஒரே குடும்பத்தில் மூவர் பலி; குழந்தை காயம்

(புதுக்குடியிருப்பு)

தேவிபுரம் பத்தாம் ஏக்கர் திட்டத்தில் காயமடைந்த யானையின் அட்ட காசத்தால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் கொல்லப்பட்டதோடு, இருவர் காயப்படுத்தப்பட்டனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை அதிகாலை இரண்டு மணிக்கு இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. வழமையாக வரும் யானைக்குக் காவல் புரிந்த வையாபுரியின் குடும்பத்தினர் வழமைக்கு மாறாக மாமரத்தின் கீழ் உறங்கியதால் இப் பரிதாபகரமான சம்பவம் நிகழ்ந்தது.

இச் சம்பவத்தில் வையாபுரியின் மனைவி சிவபாக்கியம் (45), மகன் கண்ணன் (19), மகன் கோபால் (13) ஆகியோர் யானையால் அடித்துக் கொல்லப்பட்டார்கள். இவர்களை உடன் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றும் காப்பாற்ற முடியவில்லை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# போர் நெருக்கடியை தவிர்க்க புலிகளுடன் தளபதிகள் பேச்சு

## பாலியல் குற்றத்திற்கு மரண தண்டனை

(யாழ்ப்பாணம்)

ஏழுவயது மாணவியை பலவந்தமாக பாலியல் வன்முறைக்கு உட்படுத்திய இளைஞர் ஒருவருக்கு பூநகரி சங்குப்பிட்டி வீதியில் மரணதண்டனை வழங்கப்பட்டது.

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகபடுவாள் எனும் இடத்தில் வசிக்கும் ராஜன் என்ற இருபத்திரெண்டு வயது இளைஞருக்கே

(6ஆம் பக்கம் பார்க்க)

## அஞ்சலிக்கூட்டமும் உருவப்பட திரைநீக்கமும்

(தையிட்டி)

கப்டன் வரதப்பா (சீவரெத்தினம் சிறிபாஸ்கரன்)வின் தியாகத்தை நினைவு கூரும் முகமாக அஞ்சலிக் கூட்டமும் உருவப்பட திரை நீக்கமும் தையிட்டி கலைமகள் சனசமூக நிலையத்தில் மாலை 6.30 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்ச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் பலரும் உரை

(6ஆம் பக்கம் பார்க்க)

## முக்கிய விஷயங்களில் உடன்பாடு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண தமிழீழத்தில் போர் நெருக்கடியைத் தவிர்த்து சமாதான சூழ்நிலையை வலுப்படுத்து முகமாக நேற்றுக் கொழும்பில் விடுதலைப் புலிகளுக்கும் முப்படைத் தளபதிகளுக்குமிடையே ஓர் உயர்மட்டமாநாடு நடைபெற்றது. ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் அறிவுறுத்தலின் பேரில் நடந்த இம் மாநாட்டில் முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதாக அறியப்படுகிறது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசின் உயர்மட்டத்திற்கும் இடையிலான பேச்சுக்கள் நேற்றும் கொழும்பில் மூன்று மணிநேரம் நடைபெற்றன.

வடக்கு கிழக்கு சமாதானக் குழு தலைவர் அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத், முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் அரசாங்க தரப்பில் கலந்துகொண்டனர்.

நீதிஅமைச்சர் ஜனாப் ஏ, ஸி. எஸ். ஹமீத் தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் இராணுவத் தளபதி ஜெனரல் வணசிங்கா, கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் அசோகா டி சில்வா விமானப்படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் செயலாளர் யோகரட்ணம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## றிச்சட் டி சொய்சா கொலை; பொலிஸ் சுப்பிரின்டன் கைது!

(கொழும்பு)

பத்திரிகையாளர் ரிச்சாட்டி சொய்சா கொலை வழக்கு தொடர்பாக பொலிஸ் உயர் அதிகாரி சுப்பிரின்டன் ரணில் குணசிங்க கைது செய்யப்பட்டார்.

இலங்கையில் சென்ற பெப்ரவரி மாதம் கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் ரிச்சட் டி சொய்சா கொலை விவகாரம் தொடர்பாக உயர் பொலிஸ் அதிகாரி சுப்பிரின்டன் ரணில் குணசிங்காவை கைது செய்யும்படி கொழும்பு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தனது மகனைப் பிடிக்கச் சென்ற ஆறு ஆட்களில் சுப்பிரின்டன் குணசிங்கவும் ஒருவர் என ரிச்சட் டி சொய்சா

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாநகரில் மின்மானிகளில் மோசடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபையின் மின்சார பிரிவு அதிகாரிகள், மின் மோசடிகளில் ஈடுபடுபவர்களை கண்டுபிடிக்க திடீர் சோதனைகளில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஒருவாரகாலம் திடீர் சோதனை சந்தேகமான வீடுகளில் மேற்கொள்ளப்பட்டன.

கோட்டைமுனை, பார் வீதி தாமரைகேணி பகுதியிலுள்ள 10 வீடுகளில் மின்மானி மோசடி கண்டுபிடிக்கப்பட்டது.

இம் மோசடியில் ஈடுபட்ட மின் பாவனையாளரின் மின் உடனடியாக துண்டிக்கப்பட்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர வீட்டு நீர்விநியோக சீர் கேட்டால் மக்கள் அவதி

(கொழும்புத்துறை)

யாழ். மாநகர வீட்டு நீர் விநியோகத்தை நம்பி வாழும் குடியிருப்பாளர்கள் அவலநிலைக்காளாகி வருகின்றனர்.

யாழ். மாநகரப் பகுதியில் வீடுகளுக்குக் கட்டண அடிப்படையில் குழாய் நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

ஆனால் இக் குழாய் நீர் விநியோகம் அடிச்கடி ஸ்தம்பிதம் அடைந்து வருவதால் குடியிருப்பாளர்கள் பெரிதும் அவதியுறுகின்றனர்.

கிணறு இல்லாத வீடுகள் இக் குழாய் நீர் விநியோகத்தையே நம்பி இருப்பதால்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆறாவது திருத்த நீக்கப் பிரேரணை இவ்வாரம்

## ஈழவர் முன்னணி கொடுக்கும்;

## இலங்கை ஒலிபரப்பு பிரபல்யம் அடைகின்றது

(கொழும்பு)

ஆசிய சேவை, மத்திய கிழக்கு சேவை உட்பட இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் சகல வெளிநாடுகளுக்கான ஒலிபரப்புச் சேவைகளும் பிரபல்யம் அடைந்து வருவதாக வானொலி நேயர்களின் விருப்பம் பற்றிய சமீபத்தைய மதிப்பீட்டு அறிக்கை ஒன்று கூறுகின்றது

இவ்வாண்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இடம் பெற்று வரும் ஒலிபரப்புகளில் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பார்க்கும் இலங்கையர்கள் பெரிதும் விரும்பிக் கேட்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய சேவையில் தமிழ், கன்னடம், மலையாளம், ஹிந்தி, தெலுங்கு ஆகியமொழி

## எம். பி. உத்தரவிட்டும் தமிழ்சமாதானநீதிவான் இல்லை

(தெரணியகலை)

தெரணியகலை பகுதிக்கு

பெரேரா கோரிக்கை விடுத்தும் நீதி அமைச்சு இதுவரை

## இலங்கையில் 19,0000 ஆசிரியர்கள்

(கண்டி)

இலங்கையில் கடமையாற்றும் ஆசிரியர்களின் முழுத்

## சீர் கேட்டால் மக்கள் அவதி

(கொழும்புத்துறை)

யாழ். மாநகர வீட்டு நீர் விநியோகத்தை நம்பி வாழும் குடியிருப்பாளர்கள் அவல நிலைக்காளாகி வருகின்றனர்.

யாழ். மாநகரப் பகுதியில் வீடுகளுக்குக் கட்டண அடிப்படையில் குழாய் நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

ஆனால் இக் குழாய் நீர் விநியோகம் அடிக்கடி ஸ்தம்பிதம் அடைந்து வருவதால் குடியிருப்பாளர்கள் பெரிதும் அவதியுறுகின்றனர்.

கிணறு இல்லாத வீடுகள் இக் குழாய் நீர் விநியோகத்தையே நம்பி இருப்பதால்

(6ஆம் பக்கம் பார்க்க)

## எம். பி. உத்தரவிட்டும் தமிழ்சமாதானநீதிவான் இல்லை

(தெரணியகலை)

தெரணியகலை பகுதிக்கு சமாதானநீதிவானாக தமிழர் ஒருவரை இதுவரை நியமிக்கவில்லை என இப்பகுதி தமிழ் மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இப் பகுதிக்கு தமிழர் ஒருவரை நியமிக்கும்படி கேகாலை மாவட்ட எம். பி. வின்சன்ட் பெரேரா கோரிக்கை விடுத்தும் நீதி அமைச்சு இதுவரை இந்த நியமனத்தை அறிவிக்கவில்லை.

தமிழ் பேசும் மக்கள் குறிப்பாக தோட்டத்தொழிலாளர்கள் முக்கிய ஆவணங்களை சமாதான நீதிவான் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்னும் தனிச்சிங்களத்திலேயே கடிதங்கள் வருகின்றன

(வவுனியா)

தமிழும் அரச கரும மொழியாக அமுலாக்கப்பட்ட பின்பும் வவுனியா கச்சேரிக்கு அரசாங்கத்திடமிருந்து அனுப்பிவைக்கப்படும் கடிதங்களில் பல சிங்கள மொழியிலேயே காணப்படுகின்றன என்று சம்பந்தப்பட்ட பகுதியில் பணிபுரியும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி கச்சேரி அதிகாரிகள் சிங்கள மொழியிலேயே தொடர்பு வைத்துள்ளனர் என்றும் இதற்கான காரணம் அரசிடமிருந்து அனுப்பிவைக்கப்படும் பதில்கள் விரைவாக வந்தடையும் என்ற காரணத்திற்காகவே தான் என்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அரச அதிபர் அலுவலகத்தில்

## நான்கு வாகனங்களுக்கு மேல் பாவனையில் இருக்கக் கூடாது

(கொழும்பு)

இலங்கையில் எந்தவொரு அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் நான்கு உத்தியோக பூர்வ வாகனங்களுக்கு மேல் உபயோகிக்கக் கூடாதென அரசாங்கம் கட்டுப்பாடு விதித்துள்ளது.

நான்குக்கு மேல் வாகனங்கள் இருப்பின் அவை எடுக்கப்பட்டு அவசரமாக தேவைப்படும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

இதேபோல ஒரு அலுவலகத்தில் அதாவது அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் கடமையாற்றும் சாரதிகளின் எண்ணிக்கையும் நான்காக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்க அலுவலகங்களில் உத்தியோக பூர்வ வாகனங்களின் உபயோகம் பற்றி ஆராய்ந்த சம்பள முரண்பாட்டுக் குழுவின் சிபாரிசினைத் தொடர்ந்தே அரசாங்கம் இப் பணிப்புரையை செய்துள்ளது.

மேலும் இந்த அலுவலகத்தில் அரசாங்க அதிபர் மட்டுமே உத்தியோக பூர்வமான வாகனத்தை உபயோகிக்க உரிமையுடையவராவார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

குழு தலைவர் அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத், முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதி ஜெனரல் வணசிங்கா, கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் அசோகா டி சில்வா டாக்டர் அன்ரன் பாலசிங்கம் செயலாளர் யோகரட்ணம்

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஆறாவது திருத்த நீக்கப் பிரேரணை இவ்வாரம்

## ஈழவர் முன்னணி கொடுக்கும்; இம் மாதமே விவாதிக்கப்படலாம்!

(கொழும்பு)

இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்க வேண்டுமென கோரும் தனிநபர் பிரேரணைக்கான முன்னறிவித்தலை ஈழவர் ஜனநாயக முன்னணி இவ்வாரம் கொடுக்கவிருக்கிறது.

ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு அரசாங்க ஆதரவும் இருப்பதால் இப் பிரேரணை விரைவில் பாராளுமன்ற நிகழ்ச்சி அட்டவணையில் இடம் பெறுமென்றும் இம் மாதமே இப் பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படக் கூடுமென்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு எதிர்க் கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவதற்காக ஈழவர் ஜனநாயக முன்னணிச் செயலாளர் திரு. வே. பாலகுமாரன் எதிர்க் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரபையும் பாலகுமாரன் சந்தித்துப் பேசியதாகத் தெரியவருகிறது.

ஆறாவது திருத்தத்தை நீக்க வேண்டுமென்பது விடு

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தில் முத்திரையிடப்படாத தராசுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க களஞ்சிய அறையில் இருக்கும் மூன்று தராசுகளும் முத்திரையிடப்படாது ஒரு மூடைக்கு ஐநூறு கிராம் குறைவாக நிறுக்கப்படுகிறது என்று யாழ் உத்தரவு பெற்ற வர்த்தகர் சங்கம் யாழ். உதவி அரசாங்க அதிபரிடம் சுட்டிக் காட்டியுள்ளது.

அத்துடன் இந்த பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள பொருட்களின் விலை பசார் விலையிலும் அதிகமாக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி இராணுவ முகாமை உடன் மூட முடிவு!

(கொழும்பு)

கிளிநொச்சியிலுள்ள சிறிலங்கா இராணுவ முகாம் உடனடியாக மூடப்படவிருக்கிறது. நேற்றுக்காலை கொழும்பில் விடுதலைப் புலிகளுக்கும் முப்படைத் தளபதிகளுக்குமிடையில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் இம் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி முகாமிலுள்ள இராணுவத்தினர் ஆனையிறவு முகாமுக்கு மாற்றப்படுவார்களெனவும் தெரியவருகிறது.

# மாகாணசபை கலைப்பு மசோதா அடுத்தவாரம் பாராளுமன்றம் வரும்

(கொழும்பு)

மாகாண சபையைக் கலைப்பது சம்பந்தமாக அரசு அடுத்த வாரம் மசோதா ஒன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கலாமென நம்பகரமான அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

ஜனாதிபதி பிரேமதாசாவுடன் விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணி நடத்திய பேச்சு வார்த்தைகளை அடுத்தே அரசாங்கம் அவசர அவசரமாக இந்த மசோதாவைக் கொண்டு வருவதாகத் தெரிகிறது.

தமிழீழத்தில் நிலவும் அரசியல் சூன்ய நிலையை நிரப்புவதற்கு அரசாங்கம் உடன்நடவடிக்கை எடுக்கவேண்டுமென விடுதலைப் புலிகள் வலியுறுத்தியதை அடுத்தே அரசு இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பிரபல்யம் அடைகின்றது

(கொழும்பு)

ஆசிய சேவை, மத்திய கிழக்கு சேவை உட்பட இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் சகல வெளிநாடுகளுக்கான ஒலிபரப்புச் சேவைகளும் பிரபல்யம் அடைந்து வருவதாக வானொலி நேயர்களின் விருப்பம் பற்றிய சமீபத்தைய மதிப்பீட்டு அறிக்கை ஒன்று கூறுகின்றது

இவ்வாண்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இடம் பெற்று வரும் ஒலிபரப்புகளில் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பார்க்கும் இலங்கையர்கள் பெரிதும் விரும்பிக் கேட்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய சேவையில் தமிழ், கன்னடம், மலையாளம், ஹிந்தி, தெலுங்குஆகியமொழிகளில் இடம்பெற்று வரும் ஒலிபரப்பு சேவைகளும் பல நேயர்களைகவர்ந்திருக்கிறது.

வர்த்தக ஒலிபரப்புகளை

(6ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் 19,0000 ஆசிரியர்கள்

(கண்டி)

இலங்கையில் கடமையாற்றும் ஆசிரியர்களின் முழுத் தொகை 19,0000 ஆகும்.

இவர்களில் 46 சத வீதத்தினர் பயிற்றப்படாதவர்கள் ஆவர். இவர்களுக்குப் பயிற்றுவிக்கும் திட்டத்தை கல்வி அமைச்சு துரிதப்படுத்த உள்ளது.

ஆசிரியர் கலாசாலைகள் மூலமும் தொலைப்பயிற்சி

(6ஆம் பக்கம் பார்க்க)

## வயோதிபர் தற்கொலை

(ஒட்டுசுட்டான்)

கடந்த புதன்கிழமை கற்சிலைமடு வாசியான க.வேலுப்பிள்ளை என்பவர் கிருமிநாசினி அருந்தி ஸ்தலத்திலேயே மரணத்தை தழுவிக் கொண்டார். கடன் தொல்லையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

54 வயதுடைய இவருக்கு நாலு பிள்ளைகள் உண்டு. இவர் மது போதையில் கிருமிநாசினியை அருந்தியதாலேயே இவரை உடன் காப்பாற்ற முடியாமற் போனதாக உள்ளூர் வைத்தியர் கூறுகின்றார்.

இங்கிருந்து முல்லைத்தீவு பிரதான வைத்தியசாலைக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

## நஷ்டஈடு வழங்கும் வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன

(கிளிநொச்சி)

வன்செயலின்போது பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கான வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். வேலுப்பிள்ளை பாதிக்கப்பட்ட வீடுகளை நேரில்சென்று பார்வையிட்டு, திருத்தப்பட்ட வீடுகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

கடந்த காலங்களில் நஷ்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விபுலானந்த இசைக்கல்லூரி இ[illegible] கல்லூரி வேறுபாடு நீங்கும்

(மட்டக்களப்பு)

விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் பட்டம் பெற்றவர்களுக்கும், இராமநாதன் இசைக்கல்லூரியில் பட்டம் பெற்றவர்களுக்குமிடையிலான சம்பள முரண்பாடு நீக்கப்படும். இதுகுறித்து சம்பள மீளாய்வு குழுவுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

இத் தகவலை அண்மையில் மட்டக்களப்புக்கு வருகைதந்த இந்து விவகார ராஜாங்க அமைச்சு செயலாளர் திரு.

(6ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

SPOKEN ENGLISH ADVANCED /TOEFL மாசி மாத (Feb 90) ஆரம்பித்துப் பின் இடைநிறுத்தம் செய்யப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் நேரடியாகத் தொடர்புகொள்க. நேரம் காலை 8-10 மணிவரை. மாலை 4-6 மணி வரை S.B.IYAR 12 (3ப) வைமன் வீதி, நல்லூர். (R-319)


# யாழ்ப்பாண, பேசாலையிலும் மீனவர் பயிற்சிக் கல்லூரி.

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் மீன்பிடித்தொழிலை அபிவிருத்திசெய்யும்முகமாக வடபகுதியில் யாழ்ப்பாணத்திலும் பேசாலையிலும் மீனவர் பயிற்சிக் கல்லூரிகள் நிறுவப்படவுள்ளன. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை வடக்கு, கிழக்கு மாகாண கடற்றொழில் அமைச்சு மேற்கொண்டுவருகின்றது.

இப் பயிற்சிக் கல்லூரிகளில் இயந்திரம் திருத்துதல், மீன் அறுவடை செய்தல், பதணிடுதல் ஆகிய துறைகளில் பயிற்சி வழங்கப்படும் இதுவரை காலமும் வட, கிழக்குப் பிரதேசத்திற்கு வெளியே நடைபெற்ற பயிற்சி வகுப்புக்களில் பங்கு பற்றியவர்கள் மொழிப் பிரச்சினை காரணமாக சிறந்த முறையில் பயிற்சியை மேற்கொள்ள முடியவில்லை இதனை கருத்திற் கொண்டே இப்பயிற்சிக் கல்லூரிகள் நிறுவப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட மட்டுநகரிலுள்ள கல்லடியில் 56 லட்சம் ரூபா செலவில் மீனவர் பயிற்சிக் கல்லூரி நிறுவப்படவுள்ளது. இ கல்லூரி அடுத்த வருட ஆரம்பத்தில் இயங்க ஆரம்பிக்கும் பரம்பரையான மீனவ குடும்பத்தில் பிறந்த படித்த இளைஞர்களுக்கு இப்பயிற்சிக் கல்லூரியில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. (மு)

# பரிசோதனை செய்தும் மீன்களில் புழுக்கள் வருகின்றன

(பொத்துவில்)

பொத்துவில் பிரதேசத்தில் மீனினத்திற்கு நோயில்லை என பொத்துவில்பகுதி பொது சுகாதார பரிசோதகரினால் அறிவிக்கப்பட்டும் பொதுமக்கள் மீன் உண்பதை குறைத்துள்ளனர்.

மீனினத்திற்கு நோயில்லை என கடந்த 23ஆம் திகதி அன்று ஒலி பெருக்கிமூலம் பொது சுகாதாரப் பரிசோதகரினால் வீதி வீதியாக அறிவிக்கப்பட்டது.

இவ்வறிவித்தலைத் தொடர்ந்து மீன் விற்பனை பழைய நிலைக்கு திரும்பியுள்ளது.

ஆனால் பொதுமக்கள் மீன் வாங்குவதை குறைத்துள்ளதால் மீன் மலிவு விலையில் பெறக்கூடிய வாய்ப்பேற்பட்டுள்ளது.

இதே வேளை மீனினத்தை கொள்முதல் செய்யும் நுகர்வோர் தாம் கொள்முதல் செய்த மீனினத்தை தொடர்ந்து பரிசோதனை செய்ததில் சில மீன்களில் புழுக்கள் காணப்பட்டதாக தெரிவித்தனர்.

# அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டி மெ. மி. த. கலவன் பாடசாலை மேல்மாடிக்கட்டிட அடிக்கல் நாட்டு விழா வரும் திங்கட்கிழமை பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.

இவ் வைபவத்திற்கு இக் கல்லூரியின் அதிபர் ச. திருநாவுக்கரசு தலைமை வகிப்பார். பிரதம அதிதியாக யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி இ. நாகராஜா கலந்து கொள்வார்.

# வெள்ளி விழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பாரதி சனசமூக நிலையத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு வெள்ளிவிழாவும் புதிய கட்டிடத்தின் திறப்பு விழாவும் அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கிறது.

இதையொட்டி ஆண்கள், பெண்கள், வயோதிபர் ஆகியோருக்கான சைக்கிள் ஓட்டங்கள், மருதன் ஓட்டம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், மென்பந்தாட்டம் கரம் ஆகிய போட்டிகளும் இல்ல விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (22)

## வன்முறையால் பாதிக்கப்பட்ட

# அரச உத்தியோகத்தருக்கு உடன் நஷ்டஈடு

(மட்டக்களப்பு)

பயங்கரவாத, அரசவிரோத நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் நஷ்டஈடு நிவாரணம் தாமதமின்றி வழங்கப்படல் வேண்டும்.

பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரால் சகல திணைக்கள தலைவர்களுக்கும் சுற்றறிக்கை மேற்கண்டவாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பதவி உறுதிப்படுத்தப் பட்டாலும் சரி, உறுதிப்படுத்தப் படாவிடினும் சரி இந் நஷ்டஈடு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்என அச்சுற்றறிக்கை கூறுகிறது. (37)

# பல. நோ. கூட். சங்கம் கொள்வனவில் மோசடி

(தம்பிலுவில்)

அக்கரைப்பற்று தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கசமாசத்தில் கொள்வனவில் மோசடி செய்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது பற்றி கண்டறிந்த உத்தியோகத்தர்கள் மேல்விசாரணையை தம்பிலுவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பெப்ரவரி 9ஆம் 10ஆம் திகதிகளில் தனியார் கடைகளில்சில பொருட்களை குறைந்தவிலையில் கொள்வனவு செய்து, சிட்டையை கூடியவிலை போட்டு தயாரிக்கும்படி கடைக்காரரிடம் கூற அவர்களும் அதன் படியே செய்துள்ளனர்.

இதன்படி, 12693 ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. இம் மோசடியில் சம்பந்தப்பட்டவர்களை கண்டறிந்த குழுவினர் மேல் விசாரணையை தொடருமாறும், இப்படியான தவறுகள் தொடர்ந்து நடைபெறாமல் இருக்க கண்டிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தம்பிலுவில்திருக்கோவில் பகுதிப் பொறுப்பாளர் திரு மதனைக் கேட்டுள்ளனர்.


**வின்ஸர்-யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.15, 6.15
8.00 9.30
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
8-00 9-30
Sungpa & Alanyen Naiyenna. Yuchein
in
**THE KILLER ELEPHANTS**
(Cinemascope Colour)

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-30, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6-30, 9-30
(Fantastic Film, Suitable for Childrens)
**CRAZY JUNGLE ADVENTURES**
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

**வெலிங்டன் (யாழ்)**
4-00 7-00 9-30
**A NIGHT ON THE TOWN**
8ஆம் திகதி முதல்
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசுவின்
**சம்சாரம் அது மின்சாரம்**
(கலர்)

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன், S. S. சந்திரன், பேபி ஷாலினி, சரளா
நடித்த


# தேசிய இளைஞர் தொண்டர் சேவை ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய இளைஞர் தொண்டர் சேவையை ஆரம்பிப்பதற்கு இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என அமைச்சர் நந்தா மத்தியூ தெரிவித்தார்.

இதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் தாம் எண்ணியுள்ளதாக அவர் கூறினார்

நாட்டில் சேசிய சேவைத் திட்டங்களை மேற்கொள்ளும் போது இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்குவதன் நோக்கமாகவே இத்திட்டம் கொண்டு வரப்படுகிறது எனவும் அமைச்சர் சொன்னார்.

# புங்குடுதீவில் பகிரங்கமாக சட்டவிரோத மின்பாவனை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியில் சட்டவிரோத மின்பாவனை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளதனல் அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றது.

ஒழுங்கைகள் மூலை முடக்குகள் போன்ற இடங்களில் ஏராளமாக சட்ட விரோத மின் இணைப்புக்கள் காணப்படுகின்றன.

பொது மக்கள் நடமாடும் பாதைகளூடாகவும் மேற்படி மின் இணைப்பு வயர்கள் தொடுக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சட்டவிரோத மின்னால் அண்மையில் இளம் பெண் ஒருவர் தாக்கப்பட்டமையும் குறிபபிடத்தக்கது. (22)

# சுகாதார பணிப்பாளர் மந்திகைக்கு திடீர் விஜயம்

(வடமராட்சி)

யாழ். மாவட்ட சுகாதாரப் பிராந்தியப் பணிப்பாளர் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு திடீர் விஜயம்... ட்டு யாழ். மாவட்ட சுகாதாரப் பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை கடந்த வியாழக்கிழமை நண்பகல் திடீர்விஜயமொன்றினை...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

# கேள்விப் பத்திர அறிவித்தல்

## 1000 வெள்ளிப் பதக்கம் வழங்கல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு ''யாழ்ப்பாணப் பல்கலைக் கழக'' இலட்சனை பொறிக்கப்பட்ட வெள்ளியாலான 70×55 செ. மீ. அளவுடைய நீள் வட்ட வடிவான 1000 பதக்கங்கள் வழங்குவதற்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இலட்சினை மாதிரிகளை அலுவலக நேரத்தில் பல்கலைக்கழக நிதிக்கிளையில் பார்வையிடலாம்.

கேள்விகள் சகல விபரங்களையும் கொண்டதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு எழுதப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூ 150/- காசுக்கட்டளை /தபாற் கட்டளையுடன் அனுப்பி வைக்கப்படல்

# பனைவளங்களை பாதுகாக்கவும்

வடக்கு, கிழக்கு தமிழ்ப்பிரதேசங்களிலுள்ள இயற்கை வளங்களில் பனைவளமும்முக்கியமானதொன்றாகும். எனினும் தற்போது இவைவீட்டுத் தேவைக்காகவும் குருத்துச் சாப்பிடுதல், போன்ற முறைகேடான நடவடிக்கைகளினாலும் இவை அழிக்கப்பட்டுவருகின்றன.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசம்பாவித சூழ்நிலைகளை சாதகமாகப் பயன்படுத்திசிலர் பனைமரம் வெட்டுதலையே தொழிலாக மேற்கொண்டு வந்திருக்கிறார்கள்.

தளவாய், ஏறாவூர், கொடுவாமடு, வந்தாறுமூலை, போன்ற பிரதேசங்களில் கடந்தகாலத்தில் வெட்டப்பட்ட அனேகபனைமரங்களில் அடிப்பகுதி இன்னும் பனைமரங்கள்நின்றதை ஞாபகப் படுத்துகின்றன.

எனவே இனிவரும் காலங்களிலாவது இவ்வாறன செயல்களில் ஈடுபடாமல் பனைவளங்களை பாதுகாக்க நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என இப்பகுதி பிரமுகர்கள் தெரிவிக்கின்றனர். (29)

# ஆலய புனருத்தாரணம்

(விசேட நிருபர்)

# பிரிட்டிஷ் தூதரக செயலர் மட்டக்களப்பு விஜயம்

(மட்டக்களப்பு)

கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரக மூன்றாவது செயலாளர் ஏ. ஜே. எச். கொவெல் கடந்த புதன்கிழமை மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் விஜயம் செய்திருந்தார்.

இரண்டு நாட்கள் இங்கு தங்கியிருந்த இவர் புனர்வாழ்வு திட்டப்பணிப்பாளர் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர், தலைமையக உதவி அரசாங்க அதிபர், மற்றும் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடாத்தினார்.

# தளபாடம் இன்மையால் ஆசிரியர் மாணவர் அவதி

(வந்தாறுமூலை)

கோறளங்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் போதிய தளபாட வசதிகள் இன்றி மாணவரும் ஆசிரியர்களும் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

நூற்றி அறுபத்தி மூன்று மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலைக்கு அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர்.

இக்குறைபாடுகள் குறித்து உயர் அதிகாரிகளுக்கு பல தடவைகள் புகார்கள் தெரிவித்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

பின் தங்கிய பகுதியான இங்கு, கல்வி வளர சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

## போலி விஸா பெற்று

# இத்தாலி சென்ற ஐவர் திருப்பி அனுப்பப்பட்டனர்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியி சட்ட விரோத மின்பாவனை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளதனல் அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றது.

ஒழுங்கைகள் மூலை முடக்குகள் போன்ற இடங்களில் ஏராளமாக சட்ட விரோத மின் இணைப்புக்கள் காணப்படுகின்றன.

பொது மக்கள் நடமாடும் பாதைகளூடாகவும் மேற்படி மின் இணைப்பு வயர்கள் தொடுக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சட்டவிரோத மின்னால் அண்மையில் இளம் பெண் ஒருவர் தாக்கப்பட்டமையும் குறிபபிடத்தக்கது. (22)

## சுகாதார பணிப்பாளர் மந்திகைக்கு திடீர் விஜயம்

(வடமராட்சி)

யாழ். மாவட்ட சுகாதாரா பிராந்தியப் பணிப்பாளர் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு திடீர் விஜயம் செய்தார்.

நிர்வாகச் சீர்கேட்டினால் சீரழிந்துவரும்மந்திகைஅரசினர் ஆதார வைத்தியசாலையினை நேரில் பார்வையிடும் பொருட்டு யாழ். மாவட்ட சுகாதாரப் பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை கடந்த வியாழக்கிழமை நண்பகல்திடீர்விஜயமொன்றினை மேற்கொண்டு வைத்தியசாலையின் பல பகுதியினையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

ஆனால் தாதிகள், தொழிலார் போன்றவர்கள் தமது நிலைப்பாட்டினை தெரிவிக்க முனைந்த போதும் அவர்களுடனானபேச்சினை அவர்விரும்பாமல் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (68)

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

(வடமராட்சி)

பொலிகண்டி அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் வித்தியாலய வருடாந்தவிளையாட்டுப்போட்டி அண்மையில் வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெற்றது.

வடமராட்சிக் கோட்டக் கல்வி அதிபர் திரு. ச. செல்லத்துரை சிறப்பு விருந்தினராக வல்வெட்டித்துறை உதவிக் கொத்தணி அதிபர் வை. சிவகேதாசனும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விளையாட்டுப் போட்டியில் பச்சை இல்லம் வெற்றியீட்டியது. (68)

## சட்டவிரோத மின் பாவனை

வடமராட்சியில் சட்ட விரோத மின்பாவனைகள் அதிகரித்துள்ளது.

சொந்தமாக மின்பாவனை செய்பவர்கள் கூடத் தவறான வழியில் மின்பாவனை செய்து வருகின்றார்கள்.

அல்வாய் வடக்கு போன்ற இடங்களில் சைக்கிள் ரயர்க் கம்பியினூடாக மின்சாரம் பெறப்படுகிறது.

70×55 செ. மீ. அளவுடைய நீள் வட்ட வடிவான 1000 பதக்கங்கள் வழங்குவதற்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இலட்சினை மாதிரிகளை அலுவலக நேரத்தில் பல்கலைக்கழக நிதிக்கிளையில் பார்வையிடலாம்.

கேள்விகள் சகல விபரங்களையும் கொண்டதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு எழுதப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூ 150/- காசுக்கட்டளை /தபாற் கட்டளையுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கட்டணம் இன்றி அனுப்பப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

கேள்விகளுக்கு விண்ணப்பிப்போர் கேள்விப் பத்திர தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் ''வெள்ளிப் பதக்கம் வழங்கலுக்கான கேள்விகள்'' என குறிக்கப்பட்டு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 15-6-90 காலை 10 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படியாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கேள்விகள் 15-6-90 முற்பகல் 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

பதிவாளர்

(B/1079)

தளவாய், ஏறாவூர், கொடுவாமடு, வந்தாறுமூலை, போன்ற பிரதேசங்களில் கடந்தகாலத்தில் வெட்டப்பட்ட அனேகபனைமரங்களில் அடிப்பகுதி இன்னும் பனைமரங்கள்நின்றதை ஞாபகப் படுத்துகின்றன.

எனவே இனிவரும் காலங்களிலாவது இவ்வாறன செயல்களில் ஈடுபடாமல் பனைவளங்களை பாதுகாக்க நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என இப்பகுதி பிரமுகர்கள் தெரிவிக்கின்றனர். (29)

## ஆலய புனருத்தாரணம்

(விசேட நிருபர்)

பல லட்ச ரூபா செலவில் அராலி தெற்கு ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கும்பாபிஷேக தினத்தில் அருட்கவி சீ. வினாசித்தம்பிப் புலவர் இயற்றிய ''திருப்பள்ளி எழுட்சியும், பேரின்பக் காதலும்'' அடங்கிய நூலை திரு. காசி செல்வராஜன் வெளியிட்டு வைப்பார். (21)

## முதலாம் இடம்

(நெடுங்கேணி)

அகில இலங்கை ரீதியில் நாடளாவிய கிராமோதய சபைகளுக்கிடையிலானபோட்டியில் வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணிகிராமோதய சபை முதலாம் இடத்தைபெற்றுள்ளது.

இப் போட்டி உதவி அரசாங்க அதிபர் மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் அகில இலங்கை ரீதியிலும் நடைபெறும் போட்டியாகும்.

கடந்த காலங்களில் இராணுவ வன்செயல்கள் காலங்களில் நெடுங்கேணி கிராமோதயசபை பல கஷ்டங்களின் மத்தியிலும் மக்களுக்கு அரும் பெரும் சேவைகளைச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (30)

## பெண் கொலை இரு பொலிஸார் கைது

(கொழும்பு)

கெக்கிராவ பகுதியில் இளம் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக இரு பொலிஸ்காரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பெண் மானபங்கப் படுத்தப்பட்டு கழுத்து நெரித்து கொல்லப்பட்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவரது சடலம் தோண்டி எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது.

(வந்தாறுமூலை)

கோறளங்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் போதிய தளபாட வசதிகள் இன்றி மாணவரும் ஆசிரியர்களும் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

நூற்றி அறுபத்தி மூன்று மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலைக்கு அதிபர் உட்பட மூன்று ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர்.

இக்குறைபாடுகள் குறித்து உயர் அதிகாரிகளுக்கு பல தடவைகள் புகார்கள் தெரிவித்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

பின் தங்கிய பகுதியான இங்கு, கல்வி வளர சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

### போலி விஸா பெற்று

## இத்தாலி சென்ற ஐவர் திருப்பி அனுப்பப்பட்டனர்

(கொழும்பு)

போலி விஸா பெற்று இத்தாலி சென்று திருப்பி அனுப்பப்பட்ட ஐந்து இலங்கைப் பிரஜைகள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இரகசிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இந்த ஐவரில் மூவர் தமிழ் இளைஞர்கள், இருவர் சிங்கள இளைஞர்கள்.

இவர்களை பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, இம்மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் உள்ள ஏஜண்ட் ஒருவர் மூலம் பெருமளவு பணம் கொடுத்து இத்தாலிக்கு விஸாபெற்று சென்றதாகவும், அங்கே போலி விஸா என்று நாடு கடத்தப் பட்டதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## தகுதியுள்ளவர்களுக்கு உணவுமுத்திரைவழங்கவில்லை

(அட்டாளைச்சேனை)

அட்டாளைச் சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஒலுவில், பாலமுனை அட்டாளைச்சேனை தீவகப் பிய போன்ற கிராமசேவையாளர் பகுதிகளில் உள்ள உணவு முத்திரை பெறத் தகுதியுடைய சுமார் 1500 இற்கும் மேற்பட்ட ஏழைக் குடும்பங்கள் உணவு முத்திரையின்றி மிகவும் கஷ்டப் படுகின்றனர்.

இவர்கள் உணவு முத்திரை பெறுவதற்கு விண்ணப்பித்தும் இது வரைக்கும் எதுவித மான பலனும் கிடைக்கவில்லையாதலால் உதவிஅரசாங்க அதிபரை நாடியுள்ளனர்.

இதற்கு உதவி அரசாங்க அதிபர் புதிதாக விண்ணப்பித்தால் உணவு முத்திரை பெறமுடியாதாம் எனக்கூறுகிறார்.

இதேவேளையில் இப்பகுதிகளில் அரசாங்க உத்தியோகம் புரிபவர்களுக்கு அனேகமாக கிராமசேவையாளர்களின் சிபார்சுகளை அடுத்து முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளதாம்.

உணவு முத்திரை பெறத் தகுதியுடைய குடும்பங்களுக்கு முத்திரை வழங்கப்பட்டிருந்தும், புதிதாகப் பிறந்த பிள்ளைகளுக்கு உணவு முத்திரை வழங்கப்பட இல்லையாம்.

ஆகவே இதற்குத் தகுந்த அதிகாரிகளை நடவடிக்கை எடுத்து ஏழை மக்களுக்கு உணவு முத்திரை வழங்குமாறு மக்கள் கூறுகின்றனர். (46)

## நெல் அறுவடை

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாதுறுஓயா ரெதீ தென்னைப் பகுதியில் குடியேற்ற முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட நெற்காணிகளில் முதலாவது நெல் அறுவடை ஆரம்பமாகி உள்ளது.

இக் கிராமத்தில் முதற் கட்டமாக அறுபத்திஏழு குடும்பங்களுக்கு நெற் காணிகள் வழங்கப்பட்டு இருந்தது. ஏனைய ஐம்பது குடும்பங்களுக்கும். நெற்காணிபண் படுத்தல் மற்றும் வாய்கால்வேலைகள் முடிவடைந்ததும் நெற்காணிகள் வழங்கப்பட இருக்கின்றன. (29


வெளிநாட்டில் உங்கள் உறவினர்களுக்கு

அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக

கடிதங்கள், பார்சல்கள், தஸ்தாவேஜுக்கள்

ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

DHL WORLDWIDE EXPRESS

D. H. L. International

C/o. Cosmos Marketing Service.

337, Kasturiyar Road JAFFNA.

B-965



சம்சாரம் அது மின்சாரம்
(கலர்)

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி கௌதமி, ரகுவரன், S. S. சந்திரன், பேபி ஷாலினி, சரளா
நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக வெற்றிநடை போடுகிறது.

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
சனி, ஞாயிறு நாட்களி
10 30, 2 30, 630, 9 3
விஜயகாந், ரேகா, செந்தில்
நடித்த
**சொல்வதெல்லாம் உண்மை**
B 8780

**ஸ்ரீதர் - (யாழ்.)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30
ரஜனி, ராதிகா, ரகுவரன்
நடித்த
**ஊர்க்காவலன்**
50-வது நாளை நோக்கி

**ராஜா (யாழ்)**
தினசரி 4·00, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி, கார்த்திக்
நடித்த
**மௌனராகம்**

# A/L பௌதிக இரசாயனம்
# வெப்ப இரசாயனம்
## தொடர் - 2 -

சத்தீஸ்

### தாக்க வெப்பம்:

ஒரு இரசாயனத் தாக்கத்தில் / தொகுதியில் ஏற்படும் வெப்பவுள்ளுறை மாற்றம் தாக்க வெப்பம் எனப்படும். இது நியம நிலையில் (25°C இலும் 1 atm) கூறப்படின் நியமத்தாக்க வெப்பவுள்ளுறை ($\Delta H^\circ$) எனப்படும்.

குறிப்பு:

தரப்பட்ட ஒரு சேர்வையினது ஒரு மூலின் (குறிப்பிட்ட அளவு) தாக்கத்தோடு சம்பந்தப்பட்ட வெப்பமாற்றம் தாக்கத்திற்காக, சமன்படுத்தப்பட்ட சமன்பாட்டிற்கு அமைய ஒத்த தாக்கிகளுடன் கூடிய, அச்சேர்வையின் தாக்க வெப்பம் எனப்படும்.

**தாக்கவெப்பம் தங்கியுள்ள காரணிகள்**

(1) வெப்பநிலை (2) அமுக்கம்
(3) தாக்கிகளின் பௌதிக நிலை (4) விளைவுகளின் பௌதிக நிலை

N.B. தாக்க வெப்பத்தை ஊக்கி பாதிக்கமாட்டாது.


**தாக்கவெப்பம் இருவகைப்படும்**

(1) புறவெப்பத் தாக்கம் ( $\Delta H = -$ )
(2) அகவெப்பத் தாக்கம் ( $\Delta H = +$ )

**புறவெப்பத் தாக்கங்கள்**

தாக்கிகளின் மொத்த உள்ளீட்டுச் சக்தி விளைவுகளின் மொத்த உள்ளீட்டுச் சக்தியிலும் அதிகமாக இருக்கும்போது வெப்பம் வெளிவிடப்படும் தாக்கம் புறவெப்பத்திற்குரியது எனப்படும்.

**1. புறவெப்பத் தாக்கங்களின் சக்திப்பாதை வரைபு**
படம் 1




$H_1$ - தாக்கிகளின் மொத்த உட்சக்தி
$H_2$ - விளைவுகளின் மொத்த உட்சக்தி
$\Delta H$ - தாக்கவெப்பம்
$H_3$ - ஏவற்சக்தி
$H_4$ - பிற்தாக்கத்தின் ஏவற்சக்தி
$H_5$ - இடைநிலையின் மொத்த சக்தி

1. ஒரு இரசாயனத் தாக்கத்தில் ஏற்படும் வெப்பமாற்றம் உடைக்கப்படும், ஆக்கப்படும் பிணைப்புகளின் வலிமையில் தங்கியிருக்கும்.
ஆக்கப்படும் பிணைப்புகளின் வலிமை உடைக்கப்படும் பிணைப்புக்களின் வலிமையிலும் அதிகமாக இருப்பின் சக்தி வெளிவிடப்படும் தாக்கம் புறவெப்பத்துக்குரியது எனப்படும்.

**2. புறவெப்பத் தாக்கத்தின் வெப்பவுள்ளுறை மாற்றம்**

# பலஸ்தீனியர்களை பாதுகாக்கும் ஐ. நா. பா. சபை தீர்மானம் தோல்வி

## அமெரிக்கா வீட்டோ முறையால் தடுத்தது

(நியூயோர்க்)

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் இருந்து பலஸ்தீனியர்களை பாதுகாப்பதற்கான வழிவகைகளை சிபாச்சு செய்ய மூன்றுபேர் கொண்ட குழுவை அனுப்புவதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இது தொடர்பான தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது அமெரிக்கா தனது வீட்டோ முறையால் (தடுப்பு வாக்கைப் பயன்படுத்தி) தடுத்துள்ளது.

ஐ. நா. பாதுகாப்புச்சபை கூட்டத்தில் கலந்துகொண்ட பதினைந்து உறுப்பு நாடுகளில் பதினான்கு நாடுகள் இத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன.

இத்தீர்மானத்தின்படி இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதிகளுக்குள் சென்று இக்குழுவினர் அங்கு இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனை ஆதரித்த சில நாடுகளின் தூதுவர்கள் பேசிய போது வாக்குவாதங்களும் ஏற்பட்டன.

இத்தீர்மானத்தின் மீது இஸ்ரேல் தூதுவர் உரையாற்றுகையில் இத்தூதுக்குழு வருவதை இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளாது என்று கூறினார்.

அரபு அணித்தூதுவர் இஸ்ரேல் தூதுவரின் பேச்சைக் கண்டித்துப் பேசியபோது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க இஸ்ரேலுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று தெரிவித்தார்.

இந்தக் கண்காணிப்புக்குழு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிக்கு செல்வது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தும் என்றும், மத்திய கிழக்கு சமாதானப் பேச்சிற்கு இது ஒருபோதும் உதவமாட்டாது என்றும் அமெரிக்கத் தூதுவர் இங்கு பேசுகையில் கூறினார்.

அமெரிக்கா இந்த தீர்மானத்துக்கு ஆதரவு தரும் என்றே அரபு நாடுகள் கருதியிருந்தன. ஆனால் அமெரிக்கா இதனை எதிர்த்ததும் ஒரு ஏமாற்றமாக முடிந்தது.

## பாகிஸ்தான் எல்லையில் இந்தியா படை குறைப்பு

### "வாஷிங்டன் போஸ்ட்" தகவல்

(வாஷிங்டன்)

இந்தியா பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் இருந்து சில இராணுவப் பிரிவுகளை இந்தியா வாபஸ் பெற்றுள்ளதாக "வாஷிங்டன் போஸ்ட்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

நல்லெண்ண அடிப்படையில் இதனை இந்தியா மேற்கொண்டுள்ளதாகவும் இதனால் இப்பிராந்தியத்தில் பதற்ற நிலையைத் தடுத்து உள்ளது என்றும் இப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இரு தரப்பிலும் யுத்தம் ஏற்படும் வாய்ப்புக்களையும் இந்த நடவடிக்கை குறைந்துள்ளது எனவும் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் படைக் குறைப்பு நடவடிக்கை பாகிஸ்தானும் கடைப்பிடிக்கும் என பாகிஸ்தான் ராஜதந்திர வட்டாரங்கள் கூறியதாகவும் இப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## பிரெஞ்சு ஜனாதிபதி மாஸ்கோ விஜயம்

(பாரிஸ்)

ஜனாதிபதி பிரன்ஹா மெத்திறாங் மாஸ்கோவுக்கு மேற்கொண்டுள்ள உத்தியோக பூர்வ விஜயம் குறித்து அரசியல் அவதானிகள் முக்கிய கவனம் செலுத்துகின்றனர்.

கொர்பசேவுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது இருதரப்பு உறவுகள் குறித்தும் ஜேர்மன் ஒன்றிணைப்புத் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

மேலும் சில அரசியல் அவதானிகளின் கருத்துப்படி சோவியத் ஜனாதிபதியுடன் நடாத்தப்படவுள்ள பேச்சுவார்த்தைகள் இலேசானதாக இருந்திருக்க முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய பந்தோபஸ்து சம்பந்தமாக ஹெல்சிங்கி நகரத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின், பிரான்சின் பங்கு குறித்தும் சில வாதம் பிரதிவாதங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இரண்டாவது நாளாக சோவியத் அமெரிக்கா பேச்சு

(வாஷிங்டன்)

நீண்டதூர வீச்சு அணுவாயுதங்களை குறைப்பது தொடர்பாக அமெரிக்காவும் சோவி

ஒப்பந்தம்குறித்து இவ்வாண்டு இணக்கம்காணப்படுமெனவும் இரு தலைவர்களும் அறிவித்துள்ளனர்.

## பாகிஸ்தானுக்கு இந்திய ஜனாதிபதி எச்சரிக்கை

(புதுடில்லி)

பாகிஸ்தான் இந்தியா மீது யுத்தம் மேற்கொள்ள முனையுமானால் அதனால் பாகிஸ்தான் மோசமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டி வரும் என்று இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் எச்சரித்துள்ளார்.

இந்திய-திபெத் எல்லைப் பகுதியில் உள்ள இந்திய இராணுவத்தினர் மத்தியில் ஜனாதிபதி உரையாற்றினார்.

எத்தனையோ ஆத்திர மூட்டும் செயல்களை பாகிஸ்தான் செய்து வந்துள்ள போதிலும் நாம் பொறுமையைக் கடைப்பிடித்து வந்துள்ளோம். இதனைப் பாகிஸ்தான் பலவீனமாக கருதக் கூடாது. நாம் யுத்தத்தை விரும்பவில்லை. ஆனால் யுத்தம் எம் மீது திணிக்கப்பட்டால் அதன் விளைவு எதிர் தரப்புக்குப் பயங்கரமாக இருக்கும். இவ்வாறு ஜனாதிபதி இங்கு தெரிவித்தார்.

## சோவியத் தலைவருடன் பேச வடகொரியா கண்டனம்


(சோல்)

தென்கொரிய ஜனாதிபதி ரூடே - வூவுக்கும் சோவியத் தலைவர் கொர்பசேவுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையை வட கொரியா கண்டித்துள்ளது.

இச்சந்திப்பினால் கொரியா குடாநாட்டில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என வட கொரியா அறிவித்துள்ளது.

தென்கொரிய ஜனாதிபதியும் சோவியத் ஜனாதிபதியும் விரைவில் சந்தித்துப் பேசுவதாக வெளியான செய்திகளையடுத்தே வட கொரியா இவ்வாறு கூறியுள்ளது.

## மட்டக்களப்பில் இறைச்சி





$H_1$ - தாக்கிகளின் மொத்த உட்சக்தி
$H_2$ - விளைவுகளின் மொத்த உட்சக்தி
$\Delta H$ - தாக்கவெப்பம்
$H_3$ - ஏவற்சக்தி
$H_4$ - பிற்தாக்கத்தின் ஏவற்சக்தி
$H_5$ - இடைநிலையின் மொத்த சக்தி

1. ஒரு இரசாயனத் தாக்கத்தில் ஏற்படும் வெப்பமாற்றம் உடைக்கப்படும், ஆக்கப்படும் பிணைப்புகளின் வலிமையில் தங்கியிருக்கும்.
ஆக்கப்படும் பிணைப்புகளின் வலிமை உடைக்கப்படும் பிணைப்புக்களின் வலிமையிலும் அதிகமாக இருப்பின் சக்தி வெளிவிடப்படும் தாக்கம் புறவெப்பத்துக்குரியது எனப்படும்.

## 2. புறவெப்பத் தாக்கத்தின் வெப்பவுள்ளுறை மாற்றம்

இங்கு $\Delta H$ என்பது தொகுதிக்கு ஏற்படும் வெப்ப மாற்றத்தைக் குறிக்கும். அதாவது $\Delta H = (-)$ ஆயின் தொகுதி வெப்பத்தை இழக்கும். சூழல் வெப்பத்தை ஏற்கும்.




$$\Delta H = H_2 - H_1$$
$$H_1 > H_2$$
$$\therefore \Delta H = (-)$$

## 3. ஏவற்சக்தி ($H_3$)

ஏவற்சக்தியானது பின்வருமாறு வரையறுக்கப்படும்
a) ஒரு தாக்கம் நடைபெறுவதற்கு தடையாக உள்ள சக்தி.
b) ஒரு தாக்கத்தைத் தொடக்கத் தேவையான மிகக்குறைந்த சக்தி.
c) தாக்கிகளை இடை நிலைகளாக (அருட்டப்பட்ட சிக்கல்) மாற்றத் தேவையான சக்தி ஆகும்.

௪. புறவெப்பத் தாக்க விளைவுகள் உறுதி கூடியவை. தாக்குதிறன் குறைந்தவை, காரணம், வெப்பத்தை வெளியிடுவதால் குறைந்த சக்தி நிலையில் காணப்படும்.

குறிப்பு:

புறவெப்பத் தாக்கங்கள் யாவும் சுயாதீனமாக நிகழவேண்டும், என்ற நியதியி லை. காரணம் ஒவ்வொரு தாக்கத்துக்கும் சக்தித்தடை உண்டு. இத்தடையை மீறுவதற்கு ஏவற் சக்தி கொடுக்கப்படவேண்டும். சக்தியைக் கொடுத்து தாக்கத்தைத் தொடக்கிய பின் தாக்கம் சுயமாக நிகழும்.

உதாரணம் - 1.

$H_2, O_2$ என்பன தாக்கி நீரை ஆக்கும் தாக்கமும் $H_2$, $F_2$ என்பன தாக்கி HF உருவாகும் தாக்கமும் புறவெப்பத்துக்குரியவை ஆன போதிலும் HF இன் ஆக்கம் சுயமானது. ஆனால் நீரின் ஆக்கம் சுயமாக நிகழ்வதில்லை. இது ஏன் என விளக்குக.

விடை

நீரின் ஆக்கத்துக்கான ஏவற்சக்தி அதிகம். எனவே தாக்கத்தைத் தொடக்கச் சக்தி தேவை. HF இன் ஆக்கத்துக்கான ஏவற் சக்தி குறைவு சூழல் வெப்பநிலையே தாக்கத்தை நிகழ்த்தப் போதுமானது.

F-F பிணைப்பு வலிமையிலும் O = O பிணைப்பு வலிமை மிக அதிகமாக இருப்பதால் O = O பிணைப்பை உடைத்து இடைநிலையை ஆக்குவதற்குக் கூடிய சக்தி தேவை.

உதாரணம்: 2 (M.C.Q)

கூற்று 1 : Na வளியை கணநேரத்தில் தாக்கும். ஆனால் Mg வெப்பமாக்கும் போது தாக்கும்.

கூற்று 2 : $Na_2O$ இன் ஆக்கம் புறவெப்பத்துக்குரியது. ஆனால் MgO இன் ஆக்கம் அகவெப்பத்துக்குரியது.

விடை : 3 சரியானது (√, ×) $Na_2O$, MgO என்னும் இரண்டினதும் ஆக்கமும் புறவெப்பத்துக்குரியது. ஆனால் MgO இன் ஆக்கத்துக்கான ஏவற் சக்தி $Na_2O$ இன் ஆக்கத்துக்கான ஏவற்சக்தியிலும் அதிகம்

(தொடரும்)

பூர்வ விஜயம் குறித்து அரசியல் அவதானிகள் முக்கிய கவனம் செலுத்துகின்றனர்.

கொர்பசேவுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது இருதரப்பு உறவுகள் குறித்தும் ஜேர்மன் ஒன்றிணைப்புத் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

மேலும் சில அரசியல் அவ இருந்திருக்க முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய பந்தோபஸ்து சம்பந்தமாக ஹெல்சிங்கி நகரத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின், பிரான்சின் பங்கு குறித்தும் சில வாதம் பிரதிவாதங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இரண்டாவது நாளாக சோவியத் அமெரிக்கா பேச்சு

(வாஷிங்டன்)

நீண்டதூர வீச்சு அணுவாயுதங்களை குறைப்பது தொடர்பாக அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் இணங்கியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவும் அறிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதியும் சோவியத் ஜனாதிபதியும் உயர்மட்டப் பேச்சுக்களில் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக ஈடுபட்டனர்.

ஐரோப்பாவில் பாரம்பரிய படைகுறைப்பு தொடர்பான ஒப்பந்தம்குறித்து இவ்வாண்டு இணக்கம்காணப்படுமெனவும் இரு தலைவர்களும் அறிவித்துள்ளனர்.

இரு தலைவர்களும் ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பாக ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளனர். இதன்படி இரு வல்லரசுகளின் பெருமளவு இரசாயன ஆயுதங்கள் அழிக்கப்படவுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது.

## கராச்சியில் இராணுவம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கராச்சியில் நடைபெறும் இனக்கலவரங்களையடுத்து அங்கு சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும் பொறுப்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கராச்சி நகரின் பல இடங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளதுடன் ரோந்து சேவைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கராச்சியிலும்,ஹைதராபாத்திலும் ஊரடங்குச் சட்டம் அமுலாகியுள்ளது.

## அஞ்சலிக் கூட்டம்

கடந்தவருடம் நெடுங்கேணியில் இந்திய இராணுவத்தினருடன் நடாத்திய நேரடி மோதலில் உயிர்த் தியாகம் செய்த லெப். கேணல் நவத்துக்கு முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலிக் கூட்டம் நெடுங்கேணியில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் மாணவர் ஒன்றிய நெடுங்கேணிப் பிரிவு தலைவர் மு. சிவமூர்த்தி, நெடுங்கேணி சிற்றூரவைத் தலைவர் திரு. வி. குகராசா, சிற்றூரவைச் செயலாளர் திரு. ம. பரமநாயகம், நெடுங்கேணி மகா வித்தியாலய ஆசிரியர் திரு. செ. கருணாகரன், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி நெடுங்கேணிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. பாலன், ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

னார்.

தெரிவித்தார்.

# சோவியத் தலைவருடன் பேச வடகொரியா கண்டனம்

(சோல்)

தென்கொரிய ஜனாதிபதி ரூடே - வூவுக்கும் சோவியத் தலைவர் கொர்பசேவுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையை வட கொரியா கண்டித்துள்ளது.

இச்சந்திப்பினால் கொரியா குடாநாட்டில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என வட கொரியா அறிவித்துள்ளது.

தென்கொரிய ஜனாதிபதியும் சோவியத் ஜனாதிபதியும் விரைவில் சந்தித்துப் பேசுவதாக வெளியான செய்திகளையடுத்தே வட கொரியா இவ்வாறு கூறியுள்ளது.

# மட்டக்களப்பில் இறைச்சி கட்டுப்பாட்டு விலையில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் இறைச்சி விலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இறைச்சி வியாபாரிகள் தமது விருப்பத்திற்கேற்ப விலை அதிகரிப்பு செய்வதை தடுப்பதற்காக இறைச்சி வியாபாரிகளுடன் பேசி புதிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் திரு.ஆர் யோகநாதன் கூறினார்.

இதன்படி மாட்டிறைச்சி (எலும்புடன்) கிலோ 38 ரூபா மாட்டிறைச்சி (எலும்புஇன்றி) கிலோ 43 ரூபா.

ஆட்டிறைச்சி (எலும்புடன்) கிலோ 80 ரூபா. ஆட்டிறைச்சி (எலும்பு இன்றி) கிலோ 85 ரூபா என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (37)

# கலைமகள் வித்தியாலயம் இம்மாதம் நூற்றாண்டுவிழா

(வவுனியா)

நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம் இம்மாதம் இறுதிப்பகுதியில் நூற்றாண்டு விழா கொண்டாட உள்ளது.

வவுனியா மாவட்டத்தில் முன்னணிப் பாடசாலையாக செயல்பட்டு வரும் இப்பாடசாலையில் 1200 மாணவர்கள் கல்வி கற்கின்றனர் முப்பதுக்குமதிகமான ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.

அண்மையில் தான் இப்பாடசாலை க.பொ.த. உயர்தரம் வரை தரமுயர்த்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் வவுனியாமாவட்டத்திற்கு வருகைதந்த வடகிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சின் செயலாளர் திரு. சற்குணராஜா மேற்படி பாடசாலைக்குச் சென்று இப்பாடசாலையின் வளர்ச்சியையும், கல்வியை முன்னேற்றுவதில் மிகவும் ஈடுபாடுடைய அதிபரான திரு.சற்குணசிங்கத்தையும் பாராட்டிச் சென்றுள்ளார். (தி)

# கரவெட்டிஉ.அ.அதிபர்பிரிவு இணக்க மன்றுகள்ஆரம்பம்


கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட இணக்க மன்றுகள் இயங்கவுள்ளன.

இவ்இணக்கமன்றில் பொதுமக்கள் கற்பழிப்பு, கொள்ளை, கொலை தவிர்ந்த எனைய பிரச்சினைகளை சமர்ப்பித்து தீர்த்துக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளது.

சட்டம், ஒழுக்கு நடவடிக்கைகளை பேணும் முகமாக அமைக்கப்பட்ட மேற்படி இணக்க மன்றுகள் தேசவழமைச்சட்டம், றோமன்டச்சுச் சட்டம், முஸ்லிம்மக்கள்சட்டம் ஆகியவற்றை அடியோற்றியே தீர்ப்புகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ்விணக்க மன்றுக்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஐந்து பிரதி நிதிகளை விடுதலைப் புலிகளும், ஏனைய ஐந்து பிரதிநிதிகளை பொது மக்க[illegible] தெரிவு செயதுள்ளமை [illegible]த்தக்கது.

பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட இணக்கமன்று உறுப்பினர்கள் சமூகவிரோத நடவடிக்கைகள், குற்றச்சம்பவங்கள், இலஞ்சம், ஊழல் முதலான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால் அவை தொடர்பான விபரங்களை இணக்க மன்றுபொறுப்பாளரிடம்தெரிவிக்கும்படி வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. (18)



# பயிலுநர் ஆசிரியர்களின் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பயிலுநர் ஆசிரியர்களின் கலைவிழா இன்று காலை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இக்கலை விழாவில் இசை நிகழ்ச்சிகள் நடனம், நாடகங்கள் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.

கலைவிழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக இலங்கை வேந்தனின் சுதந்திர புரட்சி மிக்க பண்டாரவன்னியனின் சரித்திர நாடகம் இடம்பெறும்.

# தமிழில் பிரதமருக்கு எழுதிய கடிதத்துக்கு தனிச்சிங்களத்தில்பதில்

(மட்டக்களப்பு)

பிரதமர் டி. பி. விஜயதுங்காவுக்குத் தமிழ்மொழியில் அனுப்பிய கடிதத்திற்குச் சிங்கள மொழியில் கிடைத்த பதிலைத் திருப்பி அனுப்பியுள்ளார் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச விவசாயிகள் சம்மேளன பொதுச்செயலாளர் ஈஸ்டன் இப்றாகீம்.

மக்கள் வங்கி பதவி உயர்வில் தமிழ், முஸ்லிம்கள் புறக்கணிப்புக் குறித்து இவர் பிரதமருக்குக் கடிதமொன்று அனுப்பினார். இதற்குக் கிடைத்த பதில் தனிச்சிங்களத்திலாகும்.

இது தொடர்பாக அவர் திருப்பி அனுப்பியுள்ள பதில் கடிதத்துடன் அனுப்பியுள்ள கடிதம் வருமாறு;

தங்கள் கடிதம் தனிச்சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டமைக்காக வேதனைப்படுகின்றோம்.

இந்நாட்டில் சிங்களமும், தமிழ் மொழியும் அரசகரும மொழியாக்கப்பட்டு அமுல் செய்வதற்குப் பல்வேறு மட்டங்களிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இக்காலகட்டத்தில் தமிழ் மொழியில் நான் அனுப்பிய கடிதத்திற்கு சிங்களமொழியிலான பதிலை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

ஜனாதிபதியின் திட்டங்கள் கொள்கைகள் அமுல்செய்யும் பொறுப்பு அமைச்சர்களுக்கும் அரச அதிகாரிகளுக்குமுடையது.

தமிழ்பேசும் மக்களிடமிருந்து வரும் ஆவணங்களுக்கு சிங்களத்தில் மறுமொழி அனுப்பி வைக்கப்பட்டிருப்பதால் தங்கள் பதில் கடிதம் இத்துடன் திருப்பி அனுப்பப்படுகிறது. பதிலைத் தமிழ் மொழி மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள் எனக் கேட்டுள்ளார். (37)

### வன்செயலால் பாதிக்கப்பட்ட

## அரச ஊழியர் குடும்பங்களுக்கு அரச வேலை வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வன் செயலில் உயிரிழந்த காணமற்போன மற்றும் தொழில் செய்ய முடியாமல் பாதிப்புக்குள்ளான குடும்பப் பொறுப்புள்ள அரச ஊழியர்களின் குடும்பத்தில் உள்ள அங்கத்தவர் ஒருவருக்கு வேலை வழங்குவதற்கான புதிய திட்டம் ஒன்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் கொழும்பில் நடைபெற்ற அரசாங்க அதிபர்கள் கூட்டத்தில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. இத் தகவலை யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் அவர்கள் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் பாதிக்கப் பட்டவர்களுக்கு பணமாக கொடுப்பதிலும் பார்க்க இத்திட்டம் பலமடங்கு பிரயோசனமானது என்றும் கூறினார். (ம)

## விளையாட்டுப் போட்டி

(விசேட நிருபர்)

1990 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளை யாழ்-மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடாத்த உள்ளது.

எறிபந்தாட்டம், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், தாச்சி ஆகிய விளையாட்டுகளுக்குப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

ஒரு சனசமூக நிலையத்தில் இருந்து ஒவ்வொரு போட்டியிலும் ஒரு குழு மாத்திரம் பங்கு கொள்ளலாம். ஜூன் மாதம் 15ஆம் திகதி முன்னதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படக் கோரப்பட்டுள்ளன. (21)

## வற்றாப்பளை பொங்கல்

(முள்ளியவளை)

வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய பொங்கல் உற்சவத்தின் போது இம்முறை பெரும் தொகையான யாத்திரிகர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனையடுத்து போக்குவரத்து, சுகாதாரம், போன்ற ஏற்ற வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்த நடவடிக்கைஎடுக்கப்பட்டு வருகின்றது என ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. சி. வினாசித்தம்பி தெரிவித்தார்.

## இளைஞர் யுவதிகள் சுயதொழில் ஆரம்பிக்க 10 லட். ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

வேலையற்றிருக்கும் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கு சுய தொழில் வேலைவாய்ப்பை ஏற்படுத்திகொள்வதற்காக பத்துலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரின் பணிப்பின் பேரில் கிளிநொச்சி உதவி திட்டமிடல் அதிகாரி திருமதி பவானி ஸ்ரீஸ்கந்தராசா இப்பணத்தை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்திற்கும், சிக்கனக் கடனுதவிக்கூட்டுறவுச் சங்கத்திற்கும் வழங்கினார்.

மேற்கூறப்பட்ட இரு கூட்டுறவுச் சங்கங்களும் தமது அங்கத்தவர்களான இளைஞர் யுவதிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபா விகிதம் சுய தொழில் வாய்ப்புக்காக இப்பணத்தை வழங்கவுள்ளன.

இப்பணத்தில் கோழி, ஆடு, மாடுவளர்த்தல், பால்சேகரித்தல், மோர்மிளகாய் தயாரித்தல், வடகம் செய்தல், கயிறு திரித்தல், கருவாடு காயப்போடுதல், பாய் பின்னல் போன்ற வேலைகளை கூட்டுறவு முறையில் செய்யப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சீட்டிழுப்பு

(முல்லைத்தீவு)

தமிழ்ஈழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் கலை கலாசார ஆதரவுடனும் நடாத்தப்படும் மாபெரும் சீட்டிழுப்பு எதிர்வரும் 11 - 06 - 1990 அன்று வற்றாப்பளை அம்பாள் ஆலய முன்றலில் தேசிய லொத்தர் சபையின் அதிர்ஷ்டலாபச் சீட்டுப் பாணியில் நடாத்தப்படும்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மேஜர் பசிலன் அவர்களின் நினைவாக அமைக்கப்படும் விளையாட்டரங்கு நிதிக்காக நடாத்தப்படும். அதிர்ஷ்டலாபச்சீட்டின் பெறுமதி ரூபா பத்து மட்டுமே

இதன் முடிவுகள் 13 - 06 - 1990 புதனன்று ,ஈழநாதம்' பத்திரிகையில் வெளிவரும்.

## மீண்டும் மண்ணெண்ணை நிரப்பு நிலையம்

(வவுனியா)

ஓமந்தைப் பகுதியில் மீண்டும் மண்ணெண்ணை நிரப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி விவசாயிகளின் வசதி கருதி சில வருடங்களுக்கு முன்னர் மூடப்பட்டிருந்த மேற்படி, நிலையத்தை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வவுனியா தெற்கு தமிழ்ப்பிரிவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ பொது முகாமையாளர் திரு ஏ. எஸ். பாரதி ஆனந்தம் தெரிவித்தார்.

இலங்கைப் பெற்றோல் கோப்பிரேசனின் ஆதரவுடன் செயல்பட்டு வந்த இந்த நிலையம் சில வருடங்களுக்கு முன்னர் மூடப்பட்டது. என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## வடபகுதிக்கு 500 மேலதிக தொலைபேசி இணைப்புகள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு மேலும் 500 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட உள்ளன. நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த அரசாங்க அதிபர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி வடபகுதிக்கு மேலும் 500 இணைப்புக்கள் வழங்கப்படும் என்று யாழ். அரசாங்கஅதிபர் திரு. அன்ரன் அல்பிரட் அவர்கள் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில் இத்தொடர்புகளை யார் யாருக்கு வழங்குவது ப்ற்றி அரசாங்க அதிபர்களும், தொலைத்தொடர்பு பொறியியலாலர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்தே தீர்மானிப்பர் என்றார். முக்கியமாக சகல உதவி அரசாங்க அதிபர் பணிமணைக்கும் ஒவ்வோர் இணைப்பு கட்டாயம் வழங்கப்படும் என்றும் கூறினார். (4)

## மூதூர் பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டி

(மூதூர்)

தமிழ் முஸ்லிம் பாடசாலைகளுக்கிடையில் பல வருடங்களாக நடைபெறாமல் இருந்த விளையாட்டுப் போட்டி கட

...

பஞ்சன் ஆகியோர் பங்குபற்றினர்.

இவ் விளையாட்டுப் போட்டியில் மூதூர், கட்டைபறிச்சான், கிளிவெட்டி, ஈச்சலம்பத்தை, ஆலங்கேணி, கிண்


## புதியதொரு ஆரம்பம்

- சகல விதமான இரும்பு, மரவேலைகட்கு:
  ஹெயிஸ் பொலிரெக் இண்டஸ்ற்றீஸ்
  (HAYES POLY TECH INDUSTRIES)
- புதிய / பழைய பொருட்கள் எதுவானாலும் வாங்க / விறக
  ஜெயாஸ் ஒக்ஷன் மாட்
  (JEYAS AUCTION MART)
- உங்கள் வீட்டுக் கண்ணாடித் தேவைகட்கும், அலுமீனிய சோகேஸ், பிளாஸ்டிக் (Perspex)பெயர் பலகைகட்கும்:
  சுதேசன் கிளாஸ் ஹவுஸ்
  (SUTHESAN GLASS HOUSE)
- சகல விதமான சிற்றுண்டி, குளிர்பானவகைகட்கு:
  ரொனீஸ் ஐஸ் பாங்க்
  (TONYS ICE BANK)

மேற்படி சேவைகளை ஒரே கூரையின் கீழ் இன்று முதல் (03. 06. 1990)
ஆரம்பித்து வழங்க உங்கள் ஆதரவை நாடும் ஸ்தாபனம்

**டாஸ் கொம்ப்ளெக்ஸ்**

இல. 16 / 63 / 5, பிரதான வீதி. யாழ்நகர்.

(R-326)



## நான்காவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 29 | 05 | 1964

உதிர்வு 03 | 06 | 1986

வீரவேங்கை

**திருநாவுக்கரசு பிரதீபன் (தீபன்)**

எம் நெஞ்சில் என்றும்
அணையா தீபச் சுடரே
நீர் மறைந்து ஆண்டுகள்
நான்காகியும் எம் நெஞ்சில்
உன் நினைவு ஒளி வீசுகின்றது
நீர் தமிழ் ஈழ விடுதலைக்காக
உம்மை அர்ப்பணித்தீர் உம்.
பெற்றோர் சகோதரர்கள் துடிதுடிக்க
நீர் மறைந்தீர் உம் நினைவு எம்
நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்
உமது கொள்கைகள் நிலைக்க வேண்டும்
அந்த நாள் உம் ஆத்மா சாந்தியடையும்
உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்

R/322

## முதலாம் ஆண்டு நினைவு

பிளாஸ்டிக் (Perspex)பெயர் பலகைகட்கும்:
சுதேசன் கிளாஸ் ஹவுஸ்
(SUTHESAN GLASS HOUSE)
சகல விதமான சிற்றுண்டி, குளிர்பானவகைகட்கு:
ரொனீஸ் ஐஸ் பாங்க்
(TONYS ICE BANK)
மேற்படி சேவைகளை ஒரே கூரையின் கீழ் இன்று முதல் (03. 06. 1990)
ஆரம்பித்து வழங்க உங்கள் ஆதரவை நாடும் ஸ்தாபனம்
டாஸ் கொம்பிளெக்ஸ்
இல. 16 / 63 / 5, பிரதான வீதி. யாழ்நகர்.
(R-326)

தரமிக்க உருக்கினாலான தளபாடங்களுக்கு
நாடவேண்டிய ஸ்தாபனம்
"ஜனார்த்தன்ஸ்" - இணுவில்
தரமான உறுதிமிக்க நீடிய பாவனைக்குகந்த
உருக்கினாலான அலுமாரிகள்
மேசைகள், கதிரைகள், தட்டச்சு மேசைகள்
மற்றும்
காரியாலய வீட்டுத்தளபாடங்கள் அத்தனையும் அதி நவீன டிசைன்களில்
என்றும் பெற்றுக்கொள்ள தாமதமின்றி நாடுங்கள்.
ஜனார்த்தன்ஸ் இண்டஸ்ரீஸ்
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.
(B-1011)

ஆண் உதவித் தாதியர் பயிற்சி நெறி
TRAINING FOR NURSES - AIDE (MALE)
ஆண்களுக்கான உதவித் தாதியர் பயிற்சிநெறி
10-06-1990 இல் ஆரம்பமாகவுள்ளன.
பதிவுகளுக்கு
Dr. V. P. சுந்தரராஜன்
சாயி மெடிக்கல் அக்கடமி
இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(6)9B.I

தில் எடுக்கப்பட்ட முடிவின் படி வடபகுதிக்கு மேலும் 500 இணைப்புக்கள் வழங்கப்படும் என்று யாழ். அரசாங்கஅதிபர் திரு. அன்ரன் அல்பிரட் அவர்கள் தெரிவித்தார். மேலும் னர்களும் சேர்ந்தே தீர்மானிப்பர் என்றார். முக்கியமாக சகல உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கும் ஒவ்வோர் இணைப்பு கட்டாயம் வழங்கப்படும் என்றும் கூறினார். (4)

## மூதூர் பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டி

(மூதூர்)

தமிழ் முஸ்லிம் பாடசாலைகளுக்கிடையில் பல வருடங்களாக நடைபெறாமல் இருந்த விளையாட்டுப் போட்டி கடந்த புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் கொடி, வே. மணி, பஞ்சன் ஆகியோர் பங்குபற்றினர்.

இவ் விளையாட்டுப் போட்டியில் மூதூர், கட்டைபறிச்சான், கிளிவெட்டி, ஈச்சலம்பத்தை, ஆலங்கேணி, கிண்ணியா, குறிஞ்சாக்கேணி ஆகிய கொத்தணிக்கு உட்பட்ட பாடசாலைகள் பங்குபற்றி வெற்றி கண்டமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாபகுதி உயர்மாணவர் யாழ்நகரில் பயில்கிறார்கள்

(வவுனியா)

வவுனியா பாடசாலைகளில் கல்வி பயிலும் உயர்வகுப்பு மாணவர்களில் சிலர் யாழ்ப்பாணம் சென்று தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்று வருகின்றனர்.

வகுப்பு இடாப்பில் இம் மாணவர்களின் வரவுஇருப்பதில்லை. ஆனால் இம்மாணவர்கள் க.பொ.த உயர் தர பரீட்சைக்குத் தோற்றுவதற்குத்தத் தமது பாடசாலைகளிலேயே தமது பெயர்களைப் பதிந்துள்ளனர்.

வசதி படைத்த மாணவர்களே இதில் ஈடுபட்டுள்ளனர் என்றும் இதனால், வசதி குறைந்த மாணவர்கள் பாதிப்படைகின்றனர் என்றும் வவுனியா கல்வி பகுதிஅதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுபற்றி யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் கல்விநிறுவனங்களில் கல்வி பயிலும் வவுனியா பாடசாலை மாணவர்கள் சிலரை கேட்டபோது வவுனியா பகுதி பாடசாலைகளில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற பாடங்கள் கற்பிப்பதற்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதனாலேயே, தாம் யாழ்ப்பாணம் சென்று தனியார் கல்விநிறுவனங்களில் மேற்படி பாடங்களை கற்று வருவதாகவும், வவுனியா பகுதியில், பேற்படி பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கான தனியார்கல்வி நிறுவனங்கள் எதுவும் ஒழுங்காக இயங்கவில்லை என்றும் தெரிவித்தனர். (தி)

## கல்வி அதிகாரிகள் மீது அபிவிருத்திச்சபை கண்டனம்

(வவுனியா)

வவுனியா தமிழ் வித்தியாலயத்தில் காணப்படும் குறைபாடுகளை தீர்த்துவைப்பதில் கல்வி அதிகாரிகள் எவரும் அக்கறை எடுப்பதில்லை என்று கோரி கண்டனத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலையின் அபிவிருத்திசபை இக் கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

இப்பாடசாலையில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை, கட்டடப்பற்றாக்குறைபோன்றவற்றில் கல்வி அதிகாரிகள் கவனமெடுப்பதில்லை என்றும் இதன் காரணமாக மாணவர்களின் கல்வி வீழ்ச்சியடைந்து வருவதாகவும் அந்தக் கண்டனத் தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.


வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு மேற்படி கண்டனத் தீர்மானத்தின் பிரதியொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அபிவிருத்தி சபையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (தி)

நான்காகியும் எம் நெஞ்சில்
உன் நினைவு ஒளி வீசுகின்றது
நீர் தமிழ் ஈழ விடுதலைக்காக
உம்மை அர்ப்பணித்தீர் உம்
பெற்றோர் சகோதரர்கள் துடிதுடிக்க
நீர் மறைந்தீர் உம் நினைவு எம்
நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்
உமது கொள்கைகள் நிலைக்க வேண்டும்
அந்த நாள் உம் ஆத்மா சாந்தியடையும்

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்

R/322

## முதலாம் ஆண்டு நினைவு



### திரு. சுப்பையா நிக்கலஸ்

பிறப்பு:- 04- 01- 1938
அழிப்பு:- 11- 06-1989

உன் மகன் புலியாக
இருந்ததால் உன்
உயிர் வாங்க நினைத்தார்கள்
பாரதத்தின்
பின் நின்ற கூலிகள்!
தலையை ஆட்டிப்
பிழைக்கின்ற பேடிகள்!
என்னதான் கண்டார்கள்?
தமிழீழத்தின்
இனப் போரில் உன்சாவும்
இணைந்ததையா...
பொன்னீழம் நாளைக்குப்
பூக்கும்! அந்தப்
பூப்பூக்க உன் சாவு
தண்ணீர் வார்க்கும்!

உறவினர்கள், நண்பர்கள்.

B/321

### சிந்தனைக்கு

அன்போ பகைமையோ அரசியல்வாதிகளுக்குக் கிடையாது. அரசியல்வாதிகள், உசிதப்படி நடப்பார்களேயொழிய, உணர்வின்படி நடப்பதில்லை.

- செஸ்ட்டர்ஃபீல்ட் பிரபு

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 03 - 06 - 90
தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208
த. பெ. எண். 05

## பத்திரிகையாளர் மாநாடு

அமைச்சரவைக் கூட்டத்தின்பின் அமைச்சரவைத் தீர்மானங்கள்பற்றி பத்திரிகையாளர்களுக்கு அமைச்சரவை பேச்சாளரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா எடுத்துக் கூறி வருவது சமீப காலமாக இருந்துவரும் நடைமுறை.

அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றிச் சொல்லும்போது பத்திரிகை நிருபர்கள் அவை சம்பந்தமாக விளக்கம் கேட்பதற்கு வாய்ப்புண்டு.

அமைச்சரவைத் தீர்மானங்கள்பற்றி மட்டுமல்லாமல் அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்தும் மற்றும் பல தரப்பட்ட விஷயங்கள் குறித்தும் பத்திரிகை நிருபர்கள் பல கேள்விகளையும் கேட்பார்கள். அமைச்சரும் பதிலளிப்பார்.

கடந்தவாரம் நடைபெற்ற வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் ஒரு பத்திரிகை நிருபர் திரும்பத் திரும்ப ஒரேமாதிரியான கேள்வியை வெவ்வேறு பாணியில் அமைச்சரைக் கேட்டிருக்கிறார்.

இந்த நிருபர் குடைந்து குடைந்து கேள்வி கேட்டதும் அமைச்சரைக் கேள்வி கேட்டு மடக்கும் முறையிலும் அந்த நிருபர் நடந்து கொண்டது அமைச்சருக்கு ஆத்திரமூட்டியது.

அமைச்சருக்கு ஆத்திரமூட்டி அவர் வாயைக் கிளறி எதையாவது வெளிக்கொண்டு வந்து விட வேண்டும் என்பதுதான் ''தி ஐலன்ட்'' என்ற பத்திரிகையைச் சேர்ந்த அந்த நிருபரின் நோக்கம்.

கேள்விகளுக்குப் பதிலளித்து வந்த அமைச்சர் இந்த நிருபரின் விதண்டாவாததனத்தைக் கண்டு கோபமடைந்து ''எனக்கு ஆத்திரமூட்டும்படியாக நீர் நடந்துகொள்கிறீர்; இப்படித் தொடர்ந்தும் நடந்தீரானல் உம்மை ஜெயிலுக்குள்தான் தள்ளுவேன். வெலிக்கடைக்குப் போக உமக்கு விருப்பமா?'' என்று அமைச்சர் அந்த நிருபரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்.

ஒரு பத்திரிகையாளனை ஜெயிலில் போடுவேன் என்று ஒரு அமைச்சர் அதுவும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு மதிப்புக் கொடுக்கும் ஜனநாயக நாட்டின் அமைச்சர் இப்படிக் கேட்டது முறையற்றது; நியாயமற்றது; கண்டனத்துக்குரியது!

பத்திரிகையாளர்கள் துருவித் துருவி அரசியல் வாதிகளின் வாயைக் கிண்டி அவர்களிடமிருந்து ஆத்திரத்துடன் வரும் பதில்களைப் [illegible]

# வடக்கு - கிழக்கு நிர்வாகம் தமிழில் இடம் பெறுமா?

சிங்களம் மட்டும் உத்தியோக மொழிச் சட்டம் கைவிடப்பட்டு தற்பொழுது தமிழ்மொழியும் ஓர் உத்தியோக மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்ட பின்னரும்கூட வடகிழக்கு மாகாணத்திற்கு உட்படவே இன்னமும் நிர்வாகத்தில் தமிழ் மொழி தமிழ் அதிகாரிகளாலும், உத்தியோகத்தர்களாலும் புறக்கணிப்புக்கு உள்ளாகி வருவது பெரும் வேதனைக்குரிய ஒரு விடயமாகும்.

அதற்குத் தெரிவிக்கப்படும் சாக்குப்போக்கு மொழி பெயர்ப்பாளர்கள், தமிழ் சுருக்கெழுத்தாளர்கள், தமிழ் தட்டெழுத்தாளர் பற்றாக் குறையே.

வடபகுதியில் உள்ள பல உள்ளூராட்சி மன்றங்கள் யாழ்ப்பாண மாநகர சபையையும் சேர்த்தே கூறலாம். அங்கு கடமைபுரியும் தமிழ்த் தட்டெழுத்தாளர்களைக் கொண்டே அவர்களது பதவிக்கு அப்பாற்பட்ட எழுதுவினைஞர்களது வேலைகளையும், ஆங்கிலத் தட்டெழுத்து வேலைகளையும் செய்வித்து வருவது தெரிந்ததே.

தமிழ் தட்டெழுத்தாளர்களைக் கொண்டு அவர்களுடைய பதவிக்கு அப்பாற்பட்ட எழுதுவினைஞர் பணிகள் மற்றும் ஆங்கிலத் தட்டெழுத்து வேலைகளைச் செய்விப்பதற்கு சொல்லப்படும் காரணம் முழுநேர வேலையில் ஈடுபடுவதற்குத் தமிழ்த் தட்டெழுத்து வேலைகள் போதா என்பதே.

தமிழ்த் தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர் பற்றாக்குறை காரணமாகவேதான் தம்மால் நிர்வாகத்தை தமிழில் கொண்டு நடத்த முடியவில்லையென்ற கூற்றுக்கு முரணாகவே சம்பந்தப்பட்ட ஊழியர்களிடமிருந்து அவர்களுடைய பதவிப் பெயர்களுக்குப் புறம்பான பணிகளில் அவர்கள் ஈடுபடுத்தப் படுகிறார்கள்.

வடபகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றம் ஒன்று தமிழ் சுருக்கெழுத்தாளரை முழுநேர எழுதுவினைஞராகவே அதாவது மின்சார பாவனையாளர்களுக்கான பட்டியல்கள், பற்றுச்சீட்டுகள் எழுதுவது போன்ற இன்னோரன்ன பணிகளில் ஈடுபடுத்தி வருகின்றது.

வடகிழக்கு மாகாணத்துக்கு உட்படவேணும் தமிழ்மொழி நிர்வாகத்தை ஊக்குவிக்கும் நாட்டம் சம்பந்தப்பட்ட தமிழ் நிர்வாகத்திடம் ஒருசிறிதளவேனும் இருக்குமாகில் இத்தகைய செய்கையில் அவர்கள் ஒரு போதுமே ஈடுபட மாட்டார்கள்.

முன்னர் எழுது வினைஞர் சேவையில் அமர்த்தப்பட்ட ஒருவர் தமது ஓராண்டு சேவைக் காலத்துள் தட்டெழுத்தில் ஒரு குறிப்பிட்ட வேகப் பரீட்சையில்தேறியிருத்தல் வேண்டும் தமது முதல் வேதன உயர்வைப் பெறுவதற்குத் தகுதி பெறுவதற்கு.

### அரசு

அவ்விதம் முதல் வேதன உயர்வைத் தட்டெழுத்துத் தேர்ச்சியால் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு எழுதுவினையருமே தம்தம் விடயத்துக்கு உட்பட்ட தட்டெழுத்து வேலைகளைத்தாமே செய்ய வேண்டுமென்றஎதிர்பார்ப்பும் இருந்தது செய்யப்படவேண்டிய தட்டெழுத்து வேலைகள் அனைத்துக்கும் எழுது வினைஞர்களால் மட்டும் ஈடுகொடுக்க முடியாது என்பதாலேயே ஒவ்வொருஅலுவலகத்திலும் அதற்கெனத் தட்டெழுத்தாளர்கள் தனியாக நியமிக்கப்பட்டனர்.

இப்பொழுதோ எழுது வினைஞர்களிடம் முதல் வேதன உயர்வுக்குத் தட்டெழுதத்துத் தேர்ச்சி வற்புறுத்தப்படுவதாகத் தெரியவில்லை.

அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தட்டெழுத்தாளர்களின் வேலைப்பழு அதிகரித்திருக்க வேண்டுமேயன்றி குறைய நியாயமில்லை.

ஆகவே தமிழ்மொழி நிர்வாகம் வடகிழக்கு மாகாணத்தில் சீராக அமுல் நடத்தப்பட வேண்டுமேல் தமிழ்த் தட்டெழுத்தாளர் சுருக்கெழுத்தாளர் மீது ஆங்கிலத் தட்டெழுத்து வேலைகளோ அல்லது எழுதுவினைஞர் பணிகளோ திணிக்கப்படாதிருக்கவும் கடமை நேரம் பூராவும் அவர்கள் தமது பதவிப் பெயர்களுக்குரிய கடமைகளை மேற்கொள்ள அனுமதிக்கவும் பார்த்துக் கொள்ளுதல் மிகமிக அவசியமாகும்.

வட கிழக்கு மாகாணங்களில் வெற்றிடமாகவுள்ள தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் மொழி பெயர்ப்பாளர் பதவிகள் கால தாமதம் இல்லாது உடன் நிரப்பப்படல் வேண்டும்.

உதாரணத்துக்கு யாழ். மாநகரசபையில் தமிழ் மொழி பெயர்ப்பாளர் பதவிகள் கடந்த பல மாதங்களாக நிரப்பப்படதேயுள்ளன. அங்கு கடமை புரியும் தமிழ்ச் சுருக் எழுத்தாளர் ஒருவர் வாரத்தில் முழு நாட்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கையொப்பமிட்டுப் பணி புரிய அனுமதிக்கப்பட்டுள்ளார் இந் நடைமுறை தவறானதாகும். யாழ்ப்பாணமாநகர சபையோ ஓர் உள்ளூராட்சி மன்றம் அதன் வரியிறுப்பாளர் பணத்தில் இருந்தே சம்பந்தப்பட்ட ஊழியரான தமிழ்ச் சுருக்கெழுத்தாளருக்கு அது சம்பளம் வழங்குகிறது. வரியிறுப்பாளர் நட்டமடைய அனுமதிப்பது முறையுமல்ல, ஒழுங்குமல்ல.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஓர் அரசாங்கத் திணைக்களம். அங்கு தமிழ்ச் சுருக்கெழுத்தாளர் சேவை தேவைப்பட்டால் அதற்கான ஒரு பதவி உருவாக்கப்பட்டு முறையான நியமனம் அங்குதானே செய்து கொள்ளப்படல் வேண்டும். ஊழியர் ஒருவர் ஒரே சம்பளத்தில் இரு வேறு வேலைத் தலங்களில் பணியாற்ற அனுமதிக்கப்படுவதால் சம்பந்தப்பட்ட பதவி தமிழ்ச் சுருக்கெழுத்தாளர் பதவி என்கின்ற காரணத்தினால் பிறிதொரு தமிழர் வேலை வாய்ப்புப் பெறும் உரிமையை அது மறுப்பதுமாகும்.

## கல்முனை அலுவலகம் ஊடாக நிதி ஒதுக்கீடுகள் ஏற்பாடு

(மட்டக்களப்பு)

வட - கிழக்கு மாகாணசபையின் கட்டிடம் தவிர ஏனைய நிதி ஒதுக்கீடுகள் யாவும் கல்முனை பிரதம கல்வி அதிகாரி அலுவலகத்திற்கு இனிமேல் நேரடியாக அனுப்பிவைக்கப் படும்.

மேற்கண்டவாறு அண்மையில் கல்முனைக்கு விஜயம் செய்த வட-கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராஜா அதிபர்கள் கல்வி அதிகாரிகள், ஆசிரிய தொழிற் சங்க பிரமுகர்களுடன் நடாத்திய சந்திப்பில் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட கல்விப் பணிப்பாளர் நிர்வாகம் காரணமாக புறக்கணிப்புகள் குறித்து சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

கல்முனை தனி கல்வி மாவட்டம் குறித்து மாகாண சபை பிரதம செயலாளரின் கவனத்திற்கும், கல்விஅமைச்சின் கவனத்திற்கும் கொண்டு வந்துதான் நடவடிக்கைஎடுக்க முடியும்.

திருக்கோவில் கோட்டக் கல்வி அலுவலகம் அம்பாறையின் கீழ் இனிமேல் இருக்க மாட்டாது. ஜூன் முதல் கல்முனையின் கீழ் கொண்டுவரப் படும்.

மாணவர்தொகைக் கேற்ப நிதி வழங்கப்படும். இனவிகிதாசார அடிப்படையில் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

இருவருட சம்பள முற்பணம் ஒழுங்கீனமின்றி உரியமுறைப் படி வழங்கப்படவேண்டும் என்றார். (37)

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இளைஞர்களுக்கு பயிற்சி

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அதன் ஒலிபரப்பு நடவடிக்கைகளின் பல துறைகளுக்கும் இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கவுள்ளது.

ஜனாபதி பிரேமதாசாவின் பணிப்புரையின்படி இந்த இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

க. பொ. த. உயர்தர பரீட்சையில் விசேட சித்தி பெற்றவர்களுக்கும் ஜனசக்திபெறும் குடும்பங்களின் இளைஞர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படும் என கூட்டுத்தாபன பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு பயிற்சி பெறுபவர்கள் கொழும்பிலும்ஏனைய பிராந்திய நிலையங்களிலும் இருபத்திரெண்டு பிராந்திய ஒலிபரப்பு நிலையங்களிலும் பயிற்சி பெறுவார்கள்.

## கிழ. பல்க. தொழிற்சங்க முக்கியஸ்தர்கள் யாழ்நகரில்

வட-கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட அரச, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு சம்பந்தமாக கிழக்குப்பல் கலைக்கழகக் கல்வியதிகாரப் பணியாளர் சங்கத் தலைவரான திரு. இரா. இராஜேஸ்வரனும், நலன்புரி இணைச் செயலாளரான திரு. கு. கந்தசாமியும் யாழ்-பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனத்தினருடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றனர். மேலும் இக் கொடுப்பனவு சம்பந்தமாக உயர் கல்வி திட்ட அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்த மேற்படி இரு பல்கலைக் கழகங்களின் உபவேந்தர்களின் அனுசரணையுடன் இரு தொழிற்சங்கங்களும் இணைந்து முயற்சி எடுத்து வருகின்றன.

## வடக்கு-கிழக்கு பகுதிகளில் நீர் வழங்கல் வேலைகள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் நீர் வழங்கல் வடிகால் சீரமைப்புக்கு ஜேர்மன் சமஷ்டிக் குடியரசும், அவுஸ்திரேலியா, [illegible] மூன்று லட்சம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் மோட்டார்களை வழங்கியுள்ளது.

ஒரு கோடியே பதினெட்டு

## மண்டைதீவு கிராமத்தைக்

பணம் கொடுத்துப் பிரயாணம் செய்யவேண்டி இருக்கிறது. பனையால் விழுந்த

சேர்ந்த அந்த நிருபரின் நோக்கம்.

கேள்விகளுக்குப் பதிலளித்து வந்த அமைச்சர் இந்த நிருபரின் விதண்டாவாததனத்தைக் கண்டு கோபமடைந்து ''எனக்கு ஆத்திரமூட்டும்படியாக நீர் நடந்துகொள்கிறீர்; இப்படித் தொடர்ந்தும் நடந்தீரானல் உம்மை ஜெயிலுக்குள்தான் தள்ளுவேன். வெலிக்கடைக்குப் போக உமக்கு விருப்பமா?'' என்று அமைச்சர் அந்த நிருபரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்.

ஒரு பத்திரிகையாளனை ஜெயிலில் போடுவேன் என்று ஒரு அமைச்சர் அதுவும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு மதிப்புக் கொடுக்கும் ஜனநாயக நாட்டின் அமைச்சர் இப்படிக் கேட்டது முறையற்றது; நியாயமற்றது; கண்டனத்துக்குரியது!

பத்திரிகையாளர்கள் துருவித் துருவி அரசியல் வாதிகளின் வாயைக் கிண்டி அவர்களிடமிருந்து ஆத்திரத்துடன் வரும் பதில்களைப் பத்திரிகைகளில் வெளியிட்டு அவர்களின் பதில்களையே அவர்களுக்கு எதிராகவும் அரசாங்கங்களுக்கெதிராகவும் பயன்படுத்த முயன்ற சம்பவங்களும், பயன்படுத்திய சம்பவங்களும் உலகநாடுகள் பலவற்றில் நிகழ்ந்திருக்கின்றன.

பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குக் கிண்டலாகப் பதில்கள் கேட்டு மடக்கும் அரசியல் தலைவர்களும் பலர் இருந்திருக்கிறார்கள்; இன்னமும் சிலர் இருக்கிறார்கள்.

இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த வி. கே. கிருஷ்ணமேனன் வெளிநாடுகளுக்குச் சென்றால் பத்திரிகைநிருபர்களுக்கும் அவருக்கும் வாய்ச்சண்டைதான் அதிகம்.

இலங்கையில் சேர் ஜோண் கொத்தலாவலை பிரதமராக இருந்தபோது வாராவாரம் ''முட்டை அப்ப பத்திரிகையாளர் சந்திப்பு'' என்று நிருபர்களைச் சந்தித்து வந்தார்.

ஒரு தடவை அவரை வம்புக்கிழுத்த நிருபர் ஒருவருக்குக் கன்னத்தில் அறை கொடுத்தார். பின்னர் அவரை அணைத்துச் சமாதானம் செய்து நண்பராக்கிக் கொண்டார்.

எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா பிரதம மந்திரியாக இருந்தபோது ''பாற்சோறு பத்திரிகைமாநாடு'' வாராவாரம் நடத்தினார்.

தென்னிலங்கை அரசியலில் சிங்கள பௌத்த பேரினவாதம் தலையெடுத்ததற்கு சிங்கள பௌத்த பத்திரிகைப் பேரினவாதமே மூலகாரணம்.

சீரழிந்துபோன நாட்டைச் சீராக்கும் முயற்சியில் பிரேமதாசா அரசு இப்பொழுது முயற்சி செய்து வருகிறது.

இதைக் கெடுப்பதற்கு சிங்கள பௌத்த பேரினவாத பத்திரிகைகள் மீண்டும் முயற்சி செய்து வருகின்றன,

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளைக் குழப்பவும் மக்களுடன் நிற்கமுடியாமல் தப்பி ஓடிய குழுக்களுக்கும் புலிகளுக்குமிடையில் சிண்டு முடிந்து அரசின் முயற்சிகளை சீர் குலைக்கவும் முனையும் சில தீய சக்திகளின் வலைக்குள் சிங்கள பௌத்த பேரினவாதப் பத்திரிகைகளும் சிக்கிக்கொண்டுள்ளன.

இவற்றின் வெளிப்பாடுதான் சில பத்திரிகையாளர்களின் விதண்டாவாதம்.

இந்த நிலையில் அமைச்சர் ரஞ்சன் ஆத்திரமடைந்ததில் ஆச்சரியமில்லை; ஆனால் ஜெயிலுக்குள் தள்ளுவேன் என்று சொன்னதுதான் தவறு!

தான் தம்மால் நிர்வாகத்தை தமிழில் கொண்டு நடத்த முடியவில்லையென்ற கூற்றுக்கு முரணாகவே சம்பந்தப்பட்ட ஊழியர்களிடமிருந்து அவர்களுடைய பதவிப் பெயர்களுக்குப் புறம்பான பணிகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

வடபகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றம் ஒன்று தமிழ் சுருக்கெழுத்தாளரை முழுநேர எழுதுவினைஞராகவே அதாவது மின்சார பாவனையாளர்களுக்கான [illegible] வேதன உயர்வுக்குத் தட்டெழுத்துத் தேர்ச்சி வற்புறுத்தப்படுவதாகத் தெரியவில்லை.

அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தட்டெழுத்தாளர்களின் வேலைப்பழு அதிகரித்திருக்க வேண்டுமேயன்றி குறைய நியாயமில்லை.

ஆகவே தமிழ்மொழி நிர்வாகம் வடகிழக்கு மாகாணத்தில் சீராக அமுல் நடத்தப்பட வேண்டுமேல் தமிழ்த் தட்டெழுத்தாளர் சுருக்கெ[illegible] சேவை தேவைப்பட்டால் அதற்கான ஒரு பதவி உருவாக்கப்பட்டு முறையான நியமனம் அங்குதானே செய்து கொள்ளப்படல் வேண்டும். ஊழியர் ஒருவர் ஒரே சம்பளத்தில் இரு வேறு வேலைத் தலங்களில் பணியாற்ற அனுமதிக்கப்படுவதால் சம்பந்தப்பட்ட பதவி தமிழ்ச் சுருக்கெழுத்தாளர் பதவி என்கின்ற காரணத்தினால் பிறிதொரு தமிழர் வேலை வாய்ப்புப் பெறும் உரிமையை அது மறுப்பதுமாகும்.

# மண்டைதீவு கிராமத்தைக் கவனிப்பார் யாருமில்லை

ஆசிரியர்
ஈழநாதம்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் மண்டைதீவுக் கிராமத்தைக் கவனிப்பார் எவரும் இல்லை. அப்படியிருந்தால் இப்படியான அவல நிலைகள் ஏற்பட இடம் இல்லை.

அரசுகளும், அரசுடமைச் சபைகளும் அரச உத்தியோகத்தர்களும் எமக்கு என்ன என்ற நிலையில் இருந்து வருகின்றார்கள்.

## 1. வீதிகள்

யாழ் / மண்டைதீவு வீதி 3 1/2 மைல் நீளம் உடையது. இலங்கை இராணுவம், மண்டைதீவுச் சந்தியில் நிலை கொண்டதன் பின் இவ்வீதி பாவனைக்குத் திறந்து விடப்படவில்லை. அவ்வீதி முழுமையாகப் பழுதடைந்து போய்விட்டது.

இந்திய இராணுவம் வந்து நிலைகொண்டதன் பின் இவ் வீதி திறந்துவிடப்படவில்லை. அவர்கள் வெளியேறிய பின் இவ்வீதிதிறந்து விடப்பட்டது அந்த வீதியால் வாகனமோ, அல்லது நடந்துதான் போக முடியாத அளவிற்குப் பழுதடைந்து விட்டது. இதையறிந்த மாகாண அரசு 1988 இல் சிறுதொகைப்பணம் கொடுத்து 1 1/2 மைல் தூரத்துக்குத் திருந்த வேலை செய்தாகள். மிகுதி வேலை பின் செய்யலாம் எனக் கூறிவிட்டு விட்டார்கள். கனரக வானங்கள் செல்வதால், அவ்வீதி முழுவதும் சேதம் அடைந்து போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் இருந்து வருகிறது. திருத்தப்பட்ட வீதிக்கு இரண்டாம் முறை தார் ஊற்றாமல் விடடுவிட்டார்கள் அதனால் அவ்வீதியும் பழுதடைந்து வருகிறது.

ஆனால் ஈழத்தில் மற்றைய வீதிகளைத் திருத்த மத்திய/மாநில அரசுகள் முழுமூச்சாக நின்று திருத்த வேலைகள் செய்கிறார்கள். ஆனால் இந்தக் கிராம வீதியைத் திருத்த அவர்களுக்கு மனம் வருவதில்லைப் போலும் இதற்கு என்ன காரணமோ தெரியாது.

அல்லைப்பிட்டி மண்டைதீவு வீதி

இவ் வீதியைத் திருத்த, மதகுகள் கட்டி இருந்தன. பிரச்சனை காரணமாக அவ் வேலைகள் அரைகுறையாகச் செய்யப்பட்டு, அதற்கு ஒதுக்கிய பணம் முழுவதும் முடிவடைந்து விட்டன. அவ்வேலையோ சரிவர நடைபெறவில்லை இப்பொழுது கட்டிய மதவுகளின்குழாய்கள் அனைத்தும் வாகன ஓட்டத்தினால் உடைபட்டு இருக்கின்றன. அதனால் வாகனங்களும் சல்ல முடியாதுஇருக்கின்றன. இதைத்திருத்துவதாக இருந்தால், ஆரம்பத்திலிருந்தே பணம் ஒதுக்கி வேலைகள் செய்ய வேண்டும், இப்படிக் கவலையீனத்தால் பொது மக்களின் பணம் வீனாக விரயமாகின்றது. எது எப்படி இருப்பினும் இவ் வீதி உடன் திருத்த வேண்டும்.

## மக்கள் மடல்

பஸ் சேவை

1983ஆம் ஆண்டுக்கு முன் யாழ்-மண்டைதீவு பஸ் சேவை ஒழுங்காக நடைபெற்று வந்தன. பிரச்சினையின் பின் பல இடங்களுக்கும் பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டன. நாட்டில் சகஜநிலை ஏற்பட்டதும் மற்றைய இடங்களுக்கெல்லாம் நல்ல பஸ் சேவை நடைபெற்று வருகின்றன ஆனால் மண்டைதீவு - யாழ் பஸ் சேவை இன்றுவரை ஆரம்பிக்கவில்லை.

இக்கிராம மக்கள் போக்குவரதுக்குப் படும் கஷ்டமோ பல. அவர்கள் தனியார் பஸ்ஸிற்கு இரண்டு மடங்கு பணம் கொடுத்துப் பிரயாணம் செய்யவேண்டி இருக்கிறது: பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல் எம்மக்களைப் போக்குவரத்துச் சபையினர் தனியார் வாகனத்தைக்கொண்டு நசுக்கிப் பிழிகின்றார்கள். ஆகவே உடனடியாக பஸ் சேவை ஆரம்பிக்க ஆவன செய்யவேண்டும் இ போ. ச. சபையினர்.

பாடசாலை

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் கனிஷ்ட பாடசாலைக் கட்டிடம் பல வருடங்களாகக் கட்டியும் முற்றுப்பெறாத நிலையில் இருந்து வருகிறது. கட்டிடத்தில் போடப்பட்ட மரங்களோ வெய்யில் மழையில் பட்டு, பழுதடைந்து வருகிறது. இந்த அவல நிலையைப் போக்க கல்வி இலாகா நடவடிக்கை எடுக்கும் என எங்கள் பாடசாலைப் பிள்ளைகள் சார்பில் கேட்கின்றேன்.

## குடிநீர் விநியோகம்

குடிநீர் விநியோகம் 83ஆம் ஆண்டுக்கு முன் சீராக நடைபெற்று வந்துள்ளது. பிரச்சினை காரணமாக அது தடைப்பட்டுவிட்டது. தற்போதைய சுபநிலையில் நீர் விநியோகத்துக்குப் பல ஸ்தாபனங்களும், பிற அரசுகளும், நீர்த்தாங்கி வாகனங்கள் கொடுத்துதவினார்கள் அவற்றில் ஒன்றை பி/அபிவிருத்திச் சபை பெற்று இவ்வூர் மக்களுக்கு நல்ல குடிநீர் விநியோகிக்கலாம் தானே!

மக்களுக்குச் சேவை செய்தால், சேவை செய்பவர்களை மக்கள் மனதில் இருத்துவர் என்பது வெள்ளிடைமலை.

அரசுகள், இக்கிராம மக்களுக்குச் சேவை செய்யா விட்டால் நலன் விரும்பிகளாவது இதுவிடயத்தில் கவனித்து இவ்வேலைகளைச் செய்து முடிக்க ஆவன செய்யும்படி கேட்கின்றேன்.

6ஆம்வட்டாரம் கனகசபாபதி
மண்டைதீவு

[illegible] னவு சம்பந்தமாக கிழக்குப்பல்கலைக்கழகக் கல்வியதிகாரப் பணியாளர் சங்கத் தலைவரான திரு. இரா. இராஜேஸ்வரனும், நலன்புரி இணைச் செயலாளரான திரு. கு. கந்தசாமியும் யாழ்-பல்[illegible]னவு சம்பந்தமாக உயர் கல்வி திட்ட அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்த மேற்படி இரு பல்கலைக் கழகங்களின் உபவேந்தர்களின் அனுசரணையுடன் இரு தொழிற்சங்கங்களும் இணைந்து முயற்சி எடுத்து வருகின்றன.

# வடக்கு-கிழக்கு பகுதிகளில் நீர் வழங்கல் வேலைகள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் நீர் வழங்கல் வடிகால் சீரமைப்புக்கு ஜேர்மன் சமஷ்டிக் குடியரசும், அவுஸ்திரேலியா, யுனிசெப் நிதியுதவி கிடைக்கவுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சின் ஊடாக வழங்கப்படும் இந்த நிதி மூலம் இந்த வேலை நடைபெறும்.

அவுஸ்திரேலியா அரசு மூன்று லட்சம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் மோட்டார்களை வழங்கியுள்ளது.

ஒரு கோடியே பதினெட்டு லட்சம் ரூபா கிளிநொச்சியில் நீர்த்தாங்கி குழாய்வேலைக்கு வழங்கப்பட்டது.

இந்த வேலைகளுக்காக வவுனியா மாவட்டத்திற்கு எண்பத்திமூன்று லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

# மாணவருடன் பெற்றோரும் தங்கியிருக்க அனுமதி

(கொழும்பு)

இந்தியாவின் தமிழ் நாட்டில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்களின் பெற்றோர்களுக்கும் அங்கு தங்கியிருக்க அனுமதி அளிக்கப்படுமென்று பிரதி இந்தியத் தூதுவர் ரத்விசாவை உத்தரவிட்டுள்ளார்

இதற்கு முன்பாக மாணவர்களின் பெற்றோர்கள் தங்கி இருப்பதில் பல சிரமங்கள் இருந்தன. அதாவது அவர்களுக்கு 'விசா' வழங்க இந்தியத் தூதரகம் கஷ்டப்படுத்தியது.

இது சம்பந்தமான பிரச்சினையை இந்திய சமுதாயப் பேரவையின் கவனத்திக்கு இலங்கை மாணவர்களின் பெற்றோர்களால் கொண்டு வரப்பட்டது.

இதன் பிரகாரம் பெற்றோர்களுக்கும் 'விசா' அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் பயிலும் மாணவர்கள் தமது பெற்றோர்களுடன் விடுமுறையைக் கழிப்பதற்காக வந்துள்ளனர்.

மீண்டும் இரு வாரங்களில் பெற்றோர்கள் சகிதம் இந்தியாசெல்ல முற்பட்டபோதே விசா பிரச்சினை உருவானது இனிமேல் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுடன் விசா கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

# புனர்வாழ்வு அமைச்சருடன் வடக்கு - கிழக்குபற்றி பேச்சு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு புனரமைப்பு வேலைகள் தொடர்பாக கொழும்பில் [illegible] மட்டப் பேச்சுவார்த்[illegible] நடைபெற்றது.

புனர்வா[illegible]ழ்வு சமூகநலத் துறை அ[illegible]மச்சர் ஏ. எம். எஸ் அதிகாரி[illegible]ன் வடக்கு கிழக்கு பகுதி [illegible]ங்க அதிபர்கள் பேச்சுவ[illegible] நடாத்தினார்கள்.

இங்கு நடைபெறும் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் விபரஙகளை கேட்டறிந்தார்.

இந்தப் பணிகளை நேரில் சென்று வடக்கு கிழக்கு பகுதிகளில் பார்வையிடவுள்ளதாகவும் அமைச்சு அதிகாரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, அம்பாறை மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும் ராஜாங்க அமைச்சர் திருமதி சமந்தா கருணாரத்தினாவும் இதில் கலந்துகொண்டனர்.

# நிவாரணம்

(கரவெட்டி)

கடந்தகாலங்களில் இலங்கை, இந்தியஇராணுவ அனர்ந்தங்களினால் கொலை செய்யப் பட்ட, ஊனப்படுத்தப் பட்ட பதினெட்டு சிவல் தொழிலாளர்களுக்கு கட்டைவேலி- உடுப்பிட்டி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கம்தலா ஆயிரம் ரூபாவிதம் நிவாரணம் வழங்கியுள்ளது.

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# வடக்குக் கிழக்கு பிரதேச அபிவிருத்திக்கு அமெரிக்கா 2200 மில். ரூபா ஒதுக்கீடு!

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அபிவிருத்தி நிதிக்கென பிரிக்கப்பட்ட நிதியில் இருந்து இலங்கையின் வட-கிழக்குப் பிரதேச அபிவிருத்தித் திட்டத்திற்கென அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் 55 மில்லியன் அமெரிக்க டொலரை அதாவது 2,200மில்லியன் இலங்கை ரூபாய்களை வழங்கியுள்ளது,

இந்நிதி நீர்ப்பாசன புனரமைப்பு வேலைகளுக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பு மற்றும் வன்செயலின்போது பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு தலா 4000 ரூபா போன்ற பல திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

இந்நிதியில் இருந்து நீர்ப்பாசன புனரமைப்பு வேலைகளுக்கென மட்டும் பதினொரு மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கான நீர்ப்பாசன புனரமைப்பு வேலைகளை துணைபொறியியலாளர் எஸ். ஆர்.பாலச்சந்திரன்அவர்களும் திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களுக்கு எஸ். செல்வரட்னம் அவர்களும் கவனித்து வருவார்கள். இவர்களுக்கு மேற்பார்வையாளராக பொறியியலாளர் கே. சண்முகராசா அவர்கள் இயங்கி வருவார். (ம)

## கடத்தல் முறியடிப்பு

இந்தியாவுக்கு விமானம் மூலம் 16.250 அமெரிக்க டொலர்களை கடத்த முயற்சி செய்த இந்திய பிரஜையை சுங்க அதிகாரிகள் தடுத்துள்ளனர்.

16.250 அமெரிக்க டொலர்களையும் இவர் தனது பர்சுக்குள் மறைத்து வைத்து கடத்திச் செல்ல முயன்ற போதே சுங்க அதிகாரிகளிடம் சிக்கினாகர்.

இவரிடம் இருந்து பணம் பறிமுதல் செய்யப்பட்டதுடன் கடத்திச் செல்ல முயன்றதற்காக 19 இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

# புஷ் - கொர்ப்பசேவ் உச்சி மாநாடு

# அணுவாயுதக் குறைப்பு உடன்பாடு

(வாசிங்டன்)

வாசிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் புஷ்சிற்கும் சோவியத் தலைவர் கொர்ப்பசேவிற்கும் இடையில் நடைபெற்ற முக்கிய உச்சிமா நாட்டின் முதலில் இரு முக்கிய ஒப்பந்தங்களில் இரு நாட்டுத் தலைவர்களும் கைச்சாத்திட்டுள்ளன.

இந்தஒப்பந்தங்களில் ஒன்று அணு ஆயுதங்களையும், இரசாயனஆயுதங்கள் குறைப்பது தொடர்பாகவும். மற்றைய ஒப்பந்தம் இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது பற்றியதும் ஆகும்.

அணுவாயுதக்குறைப்புதொடர்பான ஒப்பந்தத்தில் தற்பொழுது உள்ள அணுவாயுதங்களை 30 வீதமாகக் குறைப்பது தொடர்பாகவும், உயர்ந்த அணுவாயுதப் பரிசோதனைகளை குறைத்து மட்டுப்படுத்தப்பட்ட பரிசோதனைகளை மேற்கொள்ளுவதாகவும் இணக்கம்காணப்பட்டது. அத்தோடு தற்பொழுது இருக்கும் இரசாயன ஆயுதங்களில் 80 வீதம் குறைப்புச் செய்வதாகவும், இனி இரசாயன ஆயுத உற்பத்தியை நிறுத்துவதாகவும் ஒப்பந்தம் செய்யப்பட்டது,

இரண்டாவது ஒப்பந்தமான வர்த்தக ஒப்பந்தத்தில் வருடாந்தம் 1 கோடி தொன் தானியங்கள் சோவியத்திற்கு அமெரிக்கா வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தம் ஐந்து வருடங்களுக்குச் செல்லுபடியாகும்.

இவற்றைத் தவிர வேறும் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் பட்டுள்ளன. சூழல் பாதுகாப்பு, நெருக்கடி நிலையைப் பேச்சுவார்த்தையால் தீர்த்து வைத்தல் போன்ற ஒப்பந்தங்கள் குறிப்பிடத்தக்கது.

இந்த உச்சி மாநாடு ஆரம்பமாகும் போது உருப்படியான பலன்கள் ஏதும் ஏற்படுமா என்பது குறித்து ஐயப்பாடே இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

9 வயது பூர்த்தியடைந்தவர்கள்

# 5ஆம் ஆண்டு புலமைப் பரிசுக்கு விண்ணப்பிக்கலாம்

(வடமராட்சிகிழக்கு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு கடந்த தை மாதம் ஒன்பது வயது பூர்த்தியடைந்த மாணவர்கள் அனைவரும் விண்ணப்பிக்கலாம் என கல்வி, வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கல்வி அமைச்சினால் இப் பரீட்சை சம்பந்தமாக பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில், 1990ஆம் ஆண்டு தை மாதம் 31 ஆம் திகதி விண்ணப்பதாரிகள் பத்து வயதுக்கு மேற்பட்டவராகவும் 11 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

1986ஆம்ஆண்டுபாடசாலையில் ஐந்து வயது பூர்த்தியடைந்த நிலையில் சேர்ந்து கொண்டு தற்போது ஐந்தாம் ஆண்டில் கற்கின்ற மாணவர்கள் பத்து வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் முடியாது.

இது சம்பந்தமாக பாடசாலை அதிபர்கள் வினா எழுப்பியதையடுத்து. அச் சுற்று நிருபத்தில் வயது எல்லை தவறுதலாக பிரசுரிக்கப்பட்டிருப்பதாகவும், ஒன்பது வயதுக்கு மேற்பட்டவர்களும், பத்து வயதுக்கு உட்பட்டவர்களும் மாத்திரமே இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என கல்வி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (35)

# சொய்சா ஞாபகார்த்தமாக சர்வதேச விருது

(கொழும்பு)

இவ்வருடம் வழங்கப்படும் சர்வதேச விருதுக்கான பரிசு அண்மையில் கொலையுண்ட ரிச்சாட் டி சொய்சாவின் ஞாபகார்த்தமாகவழங்கப்படுமென்று சர்வதேச பத்திரிகையாளர் சங்கப்பணிப்பாளர் ரொபெர்டோ ஈவியோ தெரிவித்தார்.

இவ்வாறாக ரொபெர்டோ ஈவியோ ரிச்சாட் டி சொய்சாவின் தாயாருக்கு அனுப்பிய தகவலில் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பான வைபவம் நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் தாபன தலைமையகத்தில் செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி நடைபெறும்.

# காலங்கடந்த இறப்பு, பிறப்பு பதிவுகள் விரைவுபடுத்தப்படும்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட மேலதிக பதிவாளர் அலுவலகத்தில் காலம் கடந்த பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்வதில் பல தாமதம் ஏற்படுவதைத் தடுக்கும் முகமாகத் தேவைப்படும் ஆவணங்களை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

காலம் கடந்த பிறப்பு, இறப்பைப் பதிவு செய்துகொள்ளுவதற்குப் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

★ உதவிஅரசாங்க அதிபரால் மேலொப்பமிடப்பட்ட கிராம சேவை அலுவலரின் அறிக்கை

★ வைத்திய சாலையிலிருந்து பெற்றுக்கொண்ட கடிதம்.

★ உமது கலியாணசான்றிதழ்

★ பிறப்புச் சம்பந்தப்பட்டவருக்கு நேர் மூத்த, நேர் இளைய பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்.

★ பிறப்புச் சம்பந்தப்பட்டவரது கல்விகற்ற பாடசாலையிலிருந்து பெற்றுக்கொண்ட சடிதம்.

★ பிறப்புச் சம்பந்தப்பட்டவரது தடுப்பூசி ஏற்றியதற்கான அட்டை.

★ பிறப்புச் சம்பந்தப்பட்டவரது சாதகக்குறிப்பு/ஞானஸ்தான சான்றிதழ்.

★ இறப்புச் சம்பந்தப்பட்டவரது பிறப்புச் சான்றிதழ்.

★ ரூபா 40/- பெறுமதியான முத்திரை (ரூபா10/- பெறுமதியான நான்கு முத்திரைகள்)

★ மரண விசாரணை நடைபெறவில்லை என்பது பற்றி மரண விசாரணை அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொண்ட கடிதம்.

காலங்கடந்த பிறப்பு, இறப்புப் பத்திரங்களைப்பதிவுசெய்வதற்கும், தாமதமின்றிப் பெறுவதற்கும் மேற்கூறப்

# மண்ணுக்காக உழைத்தவர்களை மக்கள் என்றுமே மறப்பதில்லை

## சொக்கன் மணிவிழாவில் ஜெயராஜ்

(யாழ்ப்பாணம்)

மண்ணுக்காக, மக்களுக்காக, சமூக மேம்பாட்டிற்காக சுயநலமின்றி உழைத்தவர்களை அம்மக்கள் மறப்பதில்லை என்பதற்குச் சொக்கனின் மணிவிழா ஓர் எடுத்துக்காட்டாகும்.

பல துறைகளிலும் சிறப்புற்று விளங்கிய சொக்கன் புதியதுறை எதுவானாலும் அதைச் சவாலாகவே ஏற்று, அத்துறையில் வெற்றி கண்டவர். இவருக்கு மணிவிழா எடுத்ததன் மூலம் தமிழுலகம் தன்னையே கௌரவித்துள்ளது.

நேற்றுமாலை யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் முதுபெரும் எழுத்தாளர் சொக்கனின்மணிவிழாவில் சிறப்புரையாற்றிய கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் இவ்வாறு கூறினார்.

திறமையுள்ளவர்களை எமதுமண் பயன்படுத்த வேண்டும் சொக்கனின் ஆற்றலை சமூகம் பயன்படுத்துவதன் மூலமே அவரைக் கௌரவிக்க முடியும்.

தன்னை உயர்த்தாமல் சமூகத்தை உயர்த்தப் பாடுபட்ட இவர் மணிவிழா மட்டுமல்ல இன்னும் பல விழாக்கள்காண வேண்டும் என்றார்.

இம் மணிவிழாவில் மணிவிழாமலர் வெளியீட்டின் ஆய்வுரையை திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் வழங்கினார்.

சொக்கனின் ''மாருதப் பிரவல்லி'' நாடகநூல் வெளியீடும் இடம்பெற்றது.

நூல் வெளியீட்டுரையை பேராசிரியர் சி. சிவஞானசுந்தரமும், ஆய்வுரையை குழந்தை ம. சண்முகலிங்கமும் நிகழ்த்தினார்கள்.

இவ் விழாவில் பெருந்தொகையான அறிஞர்களும்,கலைஞர்களும் கலந்துகொண்டனர் விழா நாயகர் சொக்கன் அவரது வீட்டிலிருந்து ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு மேளதாளத்துடன் அழைத்து வரப்பட்டார். விழாவில் பூமாலைகளும், பொன்னாடைகளும் சூடப்பட்டன.

நேற்றுக்காலையில் இவரது நூல்களின் கண்காட்சி இதே பாடசாலையில் இடம்பெற்றது. எழுத்தாளர் சொக்கன் இதுவரை 35 நூல்களை எழுதியுள்ளார். 15 புனைப்பெயர்களில் இவர் ஆக்கங்களை எழுதிவருவது குறிப்பிடத்தக்கது. (மு)

யானை தாக்கி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை இரண்டரை வயதுக் குழந்தையை யானை துதிக்கையால் தூக்கியெறிந்தது. சிறு காயங்களுடன் குழந்தை உயிர் தப்பியது. இக் கோரச் சம்பவம் நிகழ்ந்த போது வையாபுரியும் பிள்ளையுடன் இருந்தார். இவரை யானை மிதிக்க முற்பட்ட போது இவர் உருண்டு தப்பித்துக் கொண்டார். (58)

இலங்கையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெறியின் கீழும் பாடசாலைகள் ஊடாக ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பொருட்டு கல்வி அமைச்சர் புதிய ஏற்பாடுகளை மேற்கொள்ள இருக்கின்றார்.

நஸ்டஈடு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈடு வழங்கப்பட்டதில் பல தவறுகள் இடம்பெற்றதால் தொடர்ந்தும் அவ் வாறான

# குறிகாட்டுவான் - நெடுந்தீவு தினமும் இரு படகு சேவை

(புங்குடுதீவு)

குறிகாட்டுவான் நெடுந்தீவு படகுச்சேவை தினசரி இரண்டு தடவைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. காலை பத்து முப்பது மணிக்கும் மாலை மூன்று முப்பது மணிக்கும் குறிகாட்டுவான் துறையிலிருந்து நெடுந்தீவுக்கு இச் சேவை நடாத்தப்படும். அதே வேளை நெடுந் தீவிலிருந்து காலை ஏழு பதினைந்திற்கும் பிற்பகல் இரண்டு மணிக்கும் மேற்படி சேவை நடாத்தப் படுகிறது. குமுதினி, வலம்புரி

காட்டுவானிலிருந்து நெடுந்தீவிற்கு செல்லும் ஒருவரிடம் அறவிடப்படும் கட்டணம் ஐம்பது சதம் மட்டுமே ஆகும்.

இதேவேளை குறிகாட்டுவான் துறையிலிருந்து நயினாதீவுக்கான சேவையில்ஈடுபடும் அனைத்து படகுகளிலும் ஒருவருக்கு நான்கு ரூபா கட்டணம் அறவிடப்படுகின்றது. இச்சேவையில் ஈடுபடும் அனைத்து படகுகளும் தனியாரின் படகுகளாய் இருப்பதனால் இக் கட்டணத்தில் குறைப்பு

டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

1986ஆம்ஆண்டுபாடசாலை

...சைக்கு விண்ணப்பிக்கலாம் என கல்வி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (35)

# சொய்சா ஞாபகார்த்தமாக சர்வதேச விருது

(கொழும்பு)

இவ்வருடம் வழங்கப்படும் சர்வதேச விருதுக்கான பரிசு அண்மையில் கொலையுண்ட ரிச்சாட் டி சொய்சாவின் ஞாபகார்த்தமாகவழங்கப்படுமென்று சர்வதேச பத்திரிகையாளர் சங்கப்பணிப்பாளர் ரொபெர்டோ ஈவியோ தெரிவித்தார்.

இவ்வாறாக ரொபெர்டோ ஈவியோ ரிச்சாட் டி சொய்சாவின் தாயாருக்கு அனுப்பிய தகவலில் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பான வைபவம் நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் தாபன தலைமையகத்தில் செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி நடைபெறும்.

## இன்னும்

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் அரசாங்கத்திடமிருந்து அனுப்பி வைக்கப்படும் சிங்கள மொழிக்கடிதங்களுடன் தமிழ் மொழியிலான கடிதங்கள் சிலவும் அனுப்பி வைக்கப்பட்டன என்றும் தற்போது தனிச்சிங்கள மொழியிலேயே பல கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன எனறும் அவர் தெரிவித்தார்.

இதேசமயம், வவுனியா கச்சேரியில்சிங்களத்தில் அமைந்த தட்டச்சு இயந்திரங்களே அதிகமாகக் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## மாநகர

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிணறுகளைத் தேடி அலையவேண்டி உள்ளது என்றும், உரிய அதிகாரிகள் கவனிப்பார்களா? என்றும் விசனம் தெரிவிக்கின்றனர் (24)

## மட்டக்களப்பு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா 2000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் மின் இணைப்பு பெறுவதென்றால் மீற்றர் கட்டணம் ரூபா650 இணைப்பு மீளப்பெறக் கட்டணம் 150 உடன்6மாதம் சராசரிமின்கட்டணம் செலுத்தவேண்டும். என மாநகரசபை அதிகாரியொருவர் தெரிவித்தார். (37)

## பாலியல்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளால் இம்மாதம் முதலாம் திகதி மேற்படி தண்டனை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆறாவது

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளின் கோரிக்கை மட்டுமல்ல தமிழ் பேசும் மக்கள் அனைவரின விருப்பமும் அதுவேயாகும் என்று திரு. பாலகுமாரன் கூறினார்.

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தம் தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையையும் தன்மானத்தையும் கௌரவத்தையுமே பாதிக்கிறது என்றும் அவர் சொன்னார்.

ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கான பிரேரணையை ஈழவர் ஜனநாயக முன்னணி கொண்டுவரவிருப்பதால் அரசாங்கம் இப் பிரேரணை கொண்டுவரும் யோசனையைக் கைவிட்டு விட்டதாகக் கூறப்படுகிறது.

## நான்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும் மாதமொன்றுக்கு 600 கிலோ மீட்டருக்கு மேல் பிரயாணம் செய்தால் மேலதிககிலோ மீட்டருக்கான எரிபொருள் செலவை அரசாங்க அதிபர் செலுத்த வேண்டும் எனவும் அக் குழு கூறியுள்ளது.

## எம். பி.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கால தாமதத்தையும் வீண் அலைச்சலையும் எதிர்நோக்குகின்றனர்.

மேலும் இங்கு நியமனம் பெற்றிருக்கும் பெரும்பான்மை சமாதான நீதிவான்களுக்கு ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு [illegible]களும் புரியாத கா[illegible]ல் தமிழில் எழுதும் சத்திய[illegible]டதாசி போன்றவற்றை உறுதிப்படுத்துவதில் தயக்கம் காட்டுகின்றனர்.

படும் ஆவணங்களை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

காலம் கடந்த பிறப்பு, இறப்பைப் பதிவு செய்துகொள்ளுவதற்குப் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

★ உதவிஅரசாங்க அதிபரால் மேலொப்பமிடப்பட்ட கிராம சேவை அலுவலரின் அறிக்கை

★ வைத்திய சாலையிலிருந்து பெற்றுக்கொண்ட கடிதம்.

★ உமது கலியாணசான்றிதழ்

★ பிறப்புச் சம்பந்தப்பட்டவருக்கு நேர் மூத்த, நேர் இளைய பிள்ளைகளின் பிறப்...

...கான அட்டை.

★ பிறப்புச் சம்பந்தப்பட்டவரது சாதகக்குறிப்பு/ஞானஸ்தான சான்றிதழ்.

★ இறப்புச் சம்பந்தப்பட்டவரது பிறப்புச் சான்றிதழ்.

★ ரூபா 40/- பெறுமதியான முத்திரை (ரூபா10/- பெறுமதியான நான்கு முத்திரைகள்)

★ மரண விசாரணை நடைபெறவில்லை என்பது பற்றி மரண விசாரணை அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொண்ட கடிதம்.

காலங்கடந்த பிறப்பு, இறப்புப் பத்திரங்களைப்பதிவுசெய்வதற்கும், தாமதமின்றிப் பெறுவதற்கும் மேற்கூறப்பட்ட சகல விபரங்களையும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தால் விசாரணை செய்து காலங்கடந்த பதிவுகளை விரைவில் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று யாழ். மேலதிக மாவட்டப் பதிவாளர் அறியத் தருகிறார். (24)

## போர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோகி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கிலும் – கிழக்கிலும் சகல இராணுவ முஸ்தீபுகளும் நிறுத்தப்பட வேண்டுமெனவும் படிப்படியாக இராணுவ முகாம்கள் மூடப்பட வேண்டுமெனவும் விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டனர்.

முப்படைகள் எந்த வகையிலும் மற்றய குழுக்களுக்கு உதவி செய்யவில்லை என்றும் புலிகளுடன் மோதலைத் தவிர்ப்பதே அரசின் நோக்கம் என்றும் அரசு தரப்பில் எடுத்து விளக்கப்பட்டது.

இம் மாநாட்டைத் தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் முப்படை அதிகாரிகளுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகள் பத்தியில் பேச்சுகளை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் இவ்வாரம் முதல் விடுதலைப் புலிகளும் அரச தரப்பு பிரதிநிதிகளும் இணைந்து விஜயம் செய்து அங்குள்ள பாதுகாப்பு மற்றும் அமைதி நடவடிக்கைகள் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடாத்தவுள்ளதாக இச் சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்டது.

இதன்படி நாளை திங்கட்கிழமை (4ஆம் திகதி) திரு. அன்ரன் பாலசிங்கம், யோகரட்ணம் யோகி ஆகியோர் அமைச்சர் ஏ. சி. எஸ் ஹமீத்துடன் மட்டக்களப்பிற்கு ஓர் உத்தியோகபூர்வமாக விஜயம் செய்வதென முடிவு செய்யப்பட்டது.

மட்டக்களப்பில் உள்ள அரச உயர்மட்டத் தலைவர்கள், படை அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் பிரதேச தலைவர்கள் ஆகியோரை சந்தித்து அப்பகுதி பாதுகாப்பு அரசியல் மற்றும் பிரச்சினைகள் குறித்து பேச்சுக்கள் நடாத்தப்படும்

## அஞ்சலிக்கூட்டம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றுவார்கள். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

கப்டன் வரதப்பா கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி இந்திய இராணுவத்துடன்ஏற்பட்ட மோதலில் வீர மரணம்அடைந்தவர்.

## யாழ். பல நோக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால்உத்தரவு பெற்ற வர்த்தகர் சங்கத்தை நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு மாற்றுமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மேலும் யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் உரிய நேரம் உணவுப்பொருள் வழங்குவதில்லை எனவும் பாகுபாடு, பாரபட்சம் அதிகார துஷ்பிரையோகம்என்பன இடம் பெறுவதாகவும் அவர்கள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

## றிச்சட்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வின் தாயார் கூறிய சாட்சியத்தின்படியே இவர் கைது செய்யப்பட்டார். ஆளை அடையாளம் கண்டு கொள்ளும் அணிவகுப்பிற்காகவே இவரை கைதுசெய்யும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது. ரிச்சட்டி சொய்சா பிடித்துச் செல்லப்பட்ட மறுநாள் அவரது உடல் கடற்கரையோரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

...யுடன் இருந்தார். இவரை யானை மிதிக்க முற்பட்ட போது இவர் உருண்டு தப்பித்துக் கொண்டார். (58)

## இலங்கையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெறியின் கீழும் பாடசாலைகள் ஊடாக ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பொருட்டு கல்வி அமைச்சர் புதிய ஏற்பாடுகளை மேற்கொள்ள இருக்கின்றார்.

## நஸ்டஈடு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈடு வழங்கப்பட்டதில் பல தவறுகள் இடம்பெற்றதால் தொடர்ந்தும் அவ்வாறான தவறுகள் இடம்பெறாது தடுப்பதற்காகவேஉதவிஅரசாங்க அதிபர்வீடுகளைநேரில்சென்று பார்வையிட்டு,நஷ்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கைஎடுத்து வருகிறார்.

கிளிநொச்சி மாவட்டத்திலேயே மிகவும் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட மக்கள் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலேயே வாழ்கிறார்கள்.

ஆதலால் உண்மையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கே நிவாரணம கிடைக்கவேண்டும் என்பதனாலும், நிவாரணம் சம்பந்தமாக ஏற்கனவே பல புகார்கள் கிடைத்துள்ளதாலும், தொடர்ந்தும் இவ்வாறான தவறுகள்ஏற்படுவதைத் தடுக்கு முகமாகவே திரு. வேலுப்பிள்ளை தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். (49)

## விபுலானந்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கே. ஸி. லோகேஸ்வரன் செய்தியாளர்களுக்கு தெரிவித்தார்.

விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் பட்டம் பெற்றோர் சான்றிதழ் தற்போது இசைநடன ஆசிரிய நியமனத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால் பட்டதாரி சம்பளம் வழங்கப்படுவதில்லை. ஆனால் தராதரப்பத்திரமற்ற ஆசிரியர் சம்பளம் வழங்கப்படுகின்றது. இச்சம்பள முரண்பாடு நீக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

விரிவுரையாளர்களுக்கும் தகைமைக்கேற்ப சம்பளத் திட்டம் அமுல் செய்யப்படும் தற்போதைய சம்பளம் மீளாய்வு செய்யப்படும்.

இசைநடனக் கல்லூரிகிழக்கு பல்கலைக் கழகத்துடன் இணைப்பது குறித்து இந்து விவகார ராஜாங்க அமைச்சு, கலாசார அமைச்சு .பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு என்பன கூடித் தீர்மானிக்க வேண்டிய விடயமாகும் என்றார். (37)

# குறிகாட்டுவான் - நெடுந்தீவு தினமும் இரு படகு சேவை

(புங்குடுதீவு)

குறிகாட்டுவான் நெடுந்தீவு படகுச்சேவை தினசரி இரண்டு தடவைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. காலை பத்து முப்பது மணிக்கும் மாலை மூன்று முப்பது மணிக்கும் குறிகாட்டுவான் துறையிலிருந்து நெடுந்தீவுக்கு இச் சேவை நடாத்தப்படும். அதே வேளை நெடுந்தீவிலிருந்து காலை ஏழு பதினைந்திற்கும் பிற்பகல் இரண்டு மணிக்கும் மேற்படி சேவை நடாத்தப் படுகிறது. குமுதினி, வலம்புரி ஆகிய இரு படகுகள் இச் சேவையில் ஈடுபடுகின்ன.ற இந்த இருபடகுகளிலும் குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவிற்கு செல்லும் ஒருவரிடம் அறவிடப்படும் கட்டணம் ஐம்பது சதம் மட்டுமே ஆகும்.

இதேவேளை குறிகாட்டுவான் துறையிலிருந்து நயினாதீவுக்கான சேவையில்ஈடுபடும் அனைத்து படகுகளிலும் ஒருவருக்கு நான்கு ரூபா கட்டணம் அறவிடப்படுகின்றது. இச்சேவையில் ஈடுபடும் அனைத்து படகுகளும் தனியாரின் படகுகளாய் இருப்பதனால் இக் கட்டணத்தில் குறைப்பு ஏற்படுத்துவது மிகவும் சிரமமாக இருப்பதாக தெரிகிறது. (22)

# நைஜீரிய உப ஜனாதிபதி கொழும்பில் தங்கிச் சென்றார்

(கொழும்பு)

நைஜீரியாக் குடியரசின் உப ஜனாதிபதி மேஜர் ஜெனரல் பவாங் கிடா சமீபத்தில் மலேஷியா செல்லும் வழியில் கொழும்பில் தரித்துச் சென்றார்.

இவரை வெளிவிவகார அமைச்சரும் நிதி இராஜாங்க அமைச்சருமான சிறில் கெரத் கட்டுநாயகா விமான நிலையத்தில் சந்தித்தார். இருவரும் நடத்திய பேச்சு வார்த்தையின் போது இருநாடுகளுக்கும் பொதுவான விடயங்களும், சர்வதேச பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்பட்டன. இவர் இலங்கை வாழ் மக்களுக்கு நைஜீரியமக்களின் வாழ்த்துச் செய்தியைத் தெரிவித்தார்.

## இலங்கை. . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

வெளிநாட்டுக் கம்பனிகள்அதிகரித்த அளவில் பயன்படுத்தி வருகின்றன யாழ்ப்பாணத்திற்கும் தென்இந்தியாவிற்கும் ஆன தமிழ் வர்த்தக சேவையின் விசேட மத்திய அலை ஒலிபரப்பு அதி சக்தி வாய்ந்த ஒலிபரப்பு மூலம் வெள்ளிக்கிழமையில் இருந்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேயர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்தச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப் பட்டதாக இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் சமரசிங்கா தெரிவித்தார்.

## வயோதிபர் தற்கொலை. .

(1 ஆம் பக்கத் தொடேர்ச்சி)

குறைந்தது 19, 20 மைல்கள் வரை செல்ல வேண்டும் என்றும் போக்குவரத்து வசதிகளும் இல்லாததால் இப்படி மரணங்கள் தவிர்க்க முடியாதது என மரண விசாரணை அதிகாரி கருத்துத் தெரிவித்துள்ளார். (58)

## கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்கிளிநொச்சியில் 9 கிராமியக் கிளைகளை ஆரம்பித்து அக் கிளைகள் ஊடாக படித்த இளைஞர் யுவதிகளுக்கு சுய தொழில் வேலை வாய்ப்பிற்காகக் கடன் வழங்கவுள்ளது.


## விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கு சேச் லேனில் நல்ல சுற்றாடலிலுள்ள காணியும் நல்லூர் ராணி வீதியிலுள்ள காணியும் மன்னார் இலுப்பக்கடவையிலுள்ள வயல் காணிகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

நா- வ. கந்தையா அன் சன்ஸ்
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு சந்தை,
நல்லூர்.

(R / 828)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.